Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மேவின்
ரெயிலறிங் அன் காமன்ஸ்
15 வருட காலமாக யாழ். குடாநாட்டில் அநேகரின் நன்மதிப்பைப் பெற்ற எமது ஸ்தாபனம் தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்றது. அனைவரதும் விருப்பம் போல.
கல்யாண சூட் - சர்வாணி
நெஷனல் - சேட்
லோங்ஸ் - சோட்ஸ்
இலாஸ்டிக் சோட்ஸ்
போன்ற ஆண்களுக்கான சகல தையல் வேலைகளையும் பெற நாடுங்கள்
(சி-736)
28, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 29 (02.04.2003) புதன்கிழமை இதழ் :181

# லங்கா முடித கப்பல் மீதான தாக்குதல்; விடுதலைப் புலிகள் அதிர்ச்சி தெரிவிப்பு!

## தமக்குத் தொடர்பில்லையெனவும் அறிவிப்பு

(கிளிநொச்சி)

**கடற்படையினரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'லங்கா முடித' என்ற கப்பல் மீது, இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக அதிர்ச்சியடைந்திருப்பதாகவும், தமக்கும் இச்சம்பவத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.**

இந்தச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி சூசை இக்கருத்தை வெளியிட்டுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரொகில்சன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துடன் தமக்கு எந்தவித தொடர்பும் இல்லை என சூசை கூறியதாகவும் அவர் சொன்னார்.

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறை நோக்கி 1700 படைவீரர்களை ஏற்றிச்சென்றபோது, 'லங்கா முடித' கப்பல் தாக்குதலுக்கு இலக்காகியது. சிறிய வள்ளங்களில் பயணித்த ஆயுததாரிகள் அதன் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். இதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பென கடற்படை குற்றஞ்சாட்டியது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தாக்கியோரைக் கண்டறிவதற்கு அரசும் புலிகளும் முயலவேண்டும்

## கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவிப்பு

திருகோணமலைக் கடலில் 'லங்கா முடித' கப்பல் மீதான தாக்குதல், கப்பலை மூழ்கடிக்கும் நோக்கிலோ அல்லது படையினரைக் கொல்லும் நோக்கிலோ நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை என கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் தெரிவித்துள்ளார்.

'லங்கா முடித' கப்பல் மீது நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற தாக்குதல் குறித்துக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாங்கள் அறிந்த மட்டிலே புலிகள் உறுப்பினர்கள் மத்தியில் மிகக்கடுமையான ஒழுக்கம் நிலவுகின்றது.

இப்படியான தாக்குதல்கள் புலிகளுக்கும் அரசுக்குமிடையே நடக்காமல் இருப்பதற்கான வழிமுறைகளை ஆராயும்படி, அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அறிக்கை அனுப்ப இருக்கிறோம். இரண்டு மூன்று மாதங்களில் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்ய இருக்கிறோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அரசியற் குழுவினர் நோர்வே நாடாளுமன்றிற்கு விஜயம்



எரிக் சொல்ஹெய்ம் சகிதம் அரசியல் விவகாரக் குழு.

ஸ்கன்டிநேவிய நாடுகளின் சமஷ்டி ஆட்சிமுறைகளை ஆராயவெனச் சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர், நேற்று முன்தினம் ஒஸ்லோவில் தனது முதல் கலந்துரையாடலை நடாத்தியது. இக்கலந்துரையாடலில், சர்வதேசப் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வுகள், சமஷ்டி ஆட்சிமுறை மற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரிஸ் நோபல் பரிசாளர் கிளிநொச்சி வருகிறார்



கொழும்பு வந்துள்ள, சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற அயர்லாந்து நாட்டவரான ஜோன் ஹியூம் இலங்கை அரச தரப்பினரையும், விடுதலைப் புலிகளையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவர், வன்னியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நாளைய தினம் சந்தித்துப் பேசவுள்ளார். இவருடன் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் இவான்ஸ், ஐரிஸ் தூதுவர் பிலிப் மக்டோனா, பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அமைச்சின் தென்னாசியப் பிராந்தியத்திற்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



முட்டாள் தினத்தில அடாவடிசெய்து முழுமுட்டாள் தாங்களெண்டு காட்டுது பார் சிலது!

# ஜப்பானிய பிக்குகள் குழு யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் நாட்டின் 16 பௌத்த துறவிகள் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்றுக் காலை இவர்கள் பௌத்த மதக் கலாசாரப்படி, யாழ். நாகவிகாரைக்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு அவர்கள் சமய வழிபாடுகளில் ஈடுபட்டனர். தொடர்ந்து 12 மணிக்கு நல்லூர், தொல்பொருட் காட்சிச்சாலை, யாழ். கோட்டை, துரையப்பா விளையாட்டரங்கு, பொது நூல்நிலையம் ஆகிய இடங்களுக்கு அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

பின்னர் - கந்தரோடை, கீரிமலை ஆகிய இடங்களுக்கும் சென்றுவிட்டு நேற்று மாலையே அவர்கள் கொழும்பு திரும்பினர்.

இவர்களுக்குப் பூரண இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.(ரா)

## உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு தள்ளுபடி

வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கென, முன்னர் கோரப்பட்டிருந்த வேட்புமனுக்களைத் தள்ளுபடி செய்வதெனவும் - புதிதாகத் தேர்தலொன்றை அறிவிக்கும்போதே இனி வேட்புமனுக்கள் கோரப்படுமென்றும் - அமைச்சரவை முழுமனதாகத் தீர்மானித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபை வளாகத்தில் ராணுவ முகாம்

# மாரப்பனவுடன் பேசியபின் இறுதிமுடிவு; கூட்டமைப்பினரிடம் பிரதமர் தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான, நகரின் மத்தியிலுள்ள காணியில் இராணுவ முகாம் அமைப்பதைத் தடுத்து நிறுத்தும்படி, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக் காலை நேரில் சந்தித்துக் கேட்டுக்கொண்டனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற பிரதமருடனான இச்சந்திப்பின்போது, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார், வீ.ஆனந்தசங்கரி, இரா.சம்பந்தன், கிருஷ்ணபிள்ளை, ரவிராஜ், செல்வம் அடைக்கலநாதன், இராஜ.குகனேஸ்வரன், தங்கவடிவேல், துரைரட்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, யாழ்.நகரின் மத்தியில் இராணுவமுகாம் அமைப்பதால் பொதுமக்கள் பல நெருக்கடிகளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முட்டாள்தின மைதெளிப்பு; கைகலப்பில் மூவர் படுகாயம்!

ஏப்ரல் முட்டாள்தின மை தெளிப்பினால் ஏற்பட்ட கைகலப்பில் நேற்று மூவர் படுகாயமடைந்தனர்.

வீதியில் சென்ற வயோதிபர் ஒருவர் மீது மை தெளிக்க இளைஞர்கள் முற்பட்டவேளை, அதனைத் தடுக்க முற்பட்ட, அன்னங்கை மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த பெனடிக்ற் ஜேம்ஸ் (வயது 37) என்பவரை இளைஞர் கோஷ்டி ஒன்று தாக்கியதில், அவர் வலது கை முறிவடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று, அராலிவெளிப் பகுதியில் தனிமையில் சென்ற பெண் ஒருவர் மீது மை தெளிக்க முற்பட்ட இளைஞர் ஒருவருக்கும், பெண்ணின் உறவினருக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வாள் வெட்டில் முடிந்தது. இதனால் இருவர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது. (சு,ரா)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-730)



திருகோணமலை ஜமாலியா கடற்கரைப் பகுதியில், நான்கு கொள்கலன்களில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் கடந்த திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைப் படங்களில் காணலாம். (படம் - கௌதமன்)

## அடிப்படை வசதிகோரி அரச அதிபருக்கு மாதர் சங்கம் கடிதம்

கைதடி, நாவற்குழியில் வசிக்கும் 160 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடற்தொழிலையே நம்பி வாழ்கின்றன. அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் உள்ள இக்கிராம மக்களுக்கு, மலசலகூட வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு, அப்பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அரச அதிபரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

## பளையில் உடற்பயிற்சிப் போட்டி

பளை கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பளை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கோட்டக்கல்வி அலுவலர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் - கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (34)

# வாக்காளர் இடாப்புப் பிரதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன!

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த, வாக்காளர் இடாப்புப் பிரதிகள் வழங்கும் பணி மீண்டும் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

சென்ற மாதம் 5 ஆம் திகதியிலிருந்து பிரதிகள் வழங்கும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் 2002 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நீண்டகாலமாகவே இருந்த, பழைய வாக்காளர் இடாப்பினை நீக்கிவிட்டு, இவ்வருடம் முதல் கிராம சேவை அலுவலரின் இலக்க அடிப்படையில் புதிய வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில், பழைய வாக்காளர் இடாப்பினைப் பயன்படுத்தியே யாழ்ப்பாணத்தில் தேர்தல்கள் நடைபெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ரா)

## வேதனம் வழங்கல்

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களின் பங்குனி, சித்திரை மாத வேதனம், கிளிநொச்சி றம்மியா மைதிலி களஞ்சியத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றது.

எதிர்வரும் 8 ஆம் திகதியன்று கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான மேற்படி வேதனம் வழங்கப்படவுள்ளது. (108)

## இன்றைய நாள் இனிய நாள்

02-04-2003 - புதன்கிழமை

| | | |
|---|---|---|
| மேடம் | :- | குடும்ப மனஸ்தாபம், நினைத்த காரிய சித்தி, பெரியோர் சிநேகம், தரும காரிய சித்தி |
| இடபம் | :- | தாரபுத்திர ரோக பீடை, விஷபயம், சோம்பல் திருடர் பயம், பொருட்சேதம் |
| மிதுனம் | :- | காரிய வெற்றி, மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி, ஊக்க மிகுதி, பெரியோர் மதிப்பு |
| கர்க்கடகம் | :- | இனசனகொண்டாட்டம், நன்மதிப்பு, சிநேகித உதவி, குடும்பசுகம் |
| சிங்கம் | :- | பொருட்செலவு, தாரசுகத் தடை, இனசனகொண்டாட்டம், அதிகார சித்தி |
| கன்னி | :- | குடும்ப மனஸ்தாபம், தூக்கக்குறைவு, தேகசுகக் குறைவு, பிரயாசத்திற்கேற்ற லாபமின்மை |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | | |
|---|---|---|
| துலாம் | :- | பயனற்ற பிரயாசம், நேத்திரரோகம், வீண்பழிகேட்டல், கோபமிகுதி |
| விருச்சிகம் | :- | தேகமெலிவு, தாழ்ந்த நிலை, பலவித பொருட்பேறு, அதிகார விருத்தி |
| தனு | :- | வீண்பழிகேட்டல், தொழில் குறைவு, பொருட்சேதம், துர்க்குணவிருத்தி, சத்துரு பீடை |
| மகரம் | :- | புதிய ஸ்தானம், வாகன சுகம், தாரபுத்திர மகிழ்ச்சி, வஸ்திர ஆபரணலாபம் |
| கும்பம் | :- | காரியசித்தி, இல்லச் சிறப்பு, சௌக்கியம் வஸ்திர ஆபரணலாபம் |
| மீனம் | :- | வயிற்றில் ரோகம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, பொருட்சேதம், காரியசித்தி |

## சட்டவிரோதமாக மண் ஏற்றப்படுகிறது

(துன்னாலை)

துன்னாலை வடக்கு வல்லிபுரம் மற்றும் மணற்காட்டுப் பகுதிகளில் நள்ளிரவு வேளையில் சட்டவிரோதமான முறையில் மண் ஏற்றப்பட்டு வருகின்றது.

இப்பகுதிகளில், தேவைக்கு அதிகமாக மண் அள்ளுவதை 'சுற்றுச்சூழல் நலன் காக்கும் அமைப்பு' கட்டுப்படுத்தியுள்ளது. எனினும், சிலர் நள்ளிரவு வேளையில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்ந்து ஏற்றுவதாக அவ்வூர் மக்கள் தெரிவித்துள்ளனர். (12)


இனிய புத்தாண்டை முன்னிட்டு
விசேட தள்ளுபடி
25-03-2003 -14-04-2003 வரையுமே
உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகலவிதமான ஆடைகளையும் குறைந்த விலையில் பெற
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P NO:- 021-2222381
சி/741 (சி/710)



ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல் - ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்
(சி-732)



நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சத்தியராஜ், குஷ்பு நடித்த
உன்னைக் கண் தேடுதே
வெள்ளி, சனி, மட்டும் 8.45 இற்கு
HOLLOW MAN
6 ஆம் திகதி முதல் Jurassic Park-3
(சி-731)


## யாழ்ப்பாண மாநகரசபை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சபையின் அனுமதி பெறாது விளம்பரம் செய்பவர்கள் அவ் விளம்பரங்களை உடன் அகற்றி சபையின் அனுமதி பெற்று விளம்பரம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஏற்கனவே 2002 ஆம் ஆண்டில் அனுமதி பெற்றவர்கள் சபையுடன் தொடர்பு கொண்டு அவ்வனுமதியை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

சபையின் அனுமதியின்றி விளம்பரம் செய்வது சட்டவிரோதமானதாகையால் அனுமதியற்ற விளம்பரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அனைவரது தகவலுக்கு கொண்டு வரப்படுகின்றது.

*திரு. இ.இராமலிங்கம்*
*ஆணையாளர்,*
*யாழ்ப்பாண மாநகரசபை.*
*31.03.2003*

(சி-735)

## மாநகரசபை - யாழ்ப்பாணம் அறிவித்தல்

யாழ்ப்பாணம் மத்திய பஸ்நிலையப் பகுதியின் சுற்றாடலிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் உள்ள நடைபாதையில் வைத்து பொருட்களை விற்பனை செய்ய வேண்டாம் எனவும், முனீஸ்வரன் வீதியில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்து விற்பனை செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வறிவித்தலையும் மீறி விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2003.04.01

(சி-734)

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


அரிய சந்தர்ப்பம்!
மொபி ஸ்டார் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற, யாழ். மாவட்டத்தின் ஏகவிநியோகஸ்தர்களான றெயின்போ லிங்ஸ் (Rainbow Links) வழங்கும்
மொபிடெல் தொலைபேசி இணைப்புக்கள்.
குறைந்த விலையில் கையடக்கத் தொலைபேசிகள்.
மொபிடெல் இணைப்புடன் மேசை தொலைபேசிகள்
அனைத்திற்கும் ஒரு வருட உத்தரவாதம்

| | |
|---|---|
| Ericsson - 1228d | 8800 /- |
| Ericsson - LX / KF 788 | 9200/- |
| Motorola - M 70A | 6800/- |
| Motorola -650 | 7000/- |
| Star TAC | 7500/- |
| Nokia -918 | 8000/- |
| Nokia - 3360 | 16000/- |
| Microtel (land Phone) | 16000/- |

Rainbow Links
Hospital Road Junction,
First Cross Street,
Jaffna.
Tel-2223170
(சி-738)



கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka
Institute of Informatics Studies
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
Elephant house Necto
அனுசரணையில்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த (உயர்தரம்) 2003
வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு
ஆசிரியர் குழாம்
வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்
காலம்:- 11.04.2003
நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை.
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.

# தெற்கில் இணக்கப்பாடு இல்லாததே போர் அச்சத்திற்குக் காரணமாகும்!

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் காலியில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தமது தரப்பிலிருந்து கோரிக்கைகளை முன் வைத்து வரும்போது - தெற்கிலுள்ளவர்கள் அவர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதில்லை. இதனாலேயே யுத்தம் மீண்டும் வந்துவிடுமோ என்ற அச்சம் தோன்றுவதற்குக் காரணமாகின்றது - எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொகில்சன் தெரிவித்தார்.

காலி மாவட்டச் செயலகத்தில் அண்மையில் தென்பகுதி சமூகத் தலைவர்களுடன் நடந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

காலி மாவட்ட மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பாலும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில் ரொகில்சன் மேலும் பேசும்போது தெரிவித்ததாவது-

விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக, அனுதாபிகளாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், நோர்வே அரசாங்கமும் நடப்பதாகத் தெற்குப் பகுதியில் தவறான கருத்து நிலவுகின்றது.

கண்காணிப்புக் குழுவில் நோர்வே மட்டும் அங்கம்வகிக்கவில்லை. ஐந்து நாடுகள் சேர்ந்த அறுபது பேர் கண்காணிப்புக்குழுவில் இணைந்திருக்கின்றனர்.

இலங்கையிலிருந்து பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியுமா என்று நோர்வே எதிர்பார்த்திருப்பதாகக் கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை.

தங்களது பிரச்சினைகளை மூன்றாந்தரப்பின் மத்தியஸ்தத்துடன் இலங்கை மக்கள் தீர்க்கலாம். அல்லது அவ்வாறான மத்தியஸ்தம் இன்றியும் தீர்ப்புக்கு முயற்சிக்கலாம். அது அவர்களது உரிமை. ஆனால், இரண்டு தரப்பும் மீண்டும் போருக்குச் சென்றுவிடக்கூடாதென்பதே அவசியமானதாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண கனடா நாட்டு சமஷ்டி அமைப்பே பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகின்றேன் என்றும் ரொகில்சன் தெரிவித்தார்.

### எழுத்தாளர் சமுத்திரம் காலமானார்

பிரபல தமிழ் எழுத்தாளரும், சாகித்திய மண்டல பரிசு பெற்றவருமான சு.சமுத்திரம் நேற்று சென்னையில் காலமானார்.

63 வயதான அவர், நேற்று ஓட்டிச் சென்ற மாருதி கார் அரசுப் பேருந்துடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் அவர் படுகாயமுற்று பின் மருத்துவமனையில் காலமானார்.

சென்னை வானொலி நிலையத்தில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய அவர், பல முற்போக்கு ஆக்கங்களைப் படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை கணினி மையங்கள்; புதிதாக ஆசிரியர்கள் தெரிவாவர்!

## தகவல் தொழில்நுட்பப் பாடம் சாதாரணதரப் பரீட்சையிலும்

(கொழும்பு)

அடுத்த வருடத்திலிருந்து க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தகவல் தொழில்நுட்பத்தினை ஒரு பாடமாக மாணவர்கள் கற்றுக்கொள்ளலாம் எனக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்களிடையே கணினி பற்றிய அடிப்படை அறிவை விருத்திசெய்யும் முகமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது - இலங்கையில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும்- கணினி மற்றும் ஆங்கில கல்வியை வளர்க்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளதாவும் கல்வியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் கணினி மையங்களை அமைக்க 800 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 205 கணினி மையங்கள் இம்மாதத்தினுள் நிறுவப்பட்டுவிடுமென்றும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி 1ஏ மற்றும் 1பி தரங்களிலுள்ள பாடசாலைகளுக்கு 20 கணினிகளும், மூன்று பிரிண்டர்களும், இணையத்தொடர்பும் வழங்கப்படவுள்ளது. 1சீ தரத்திலுள்ள பாடசாலைகளுக்கு 15 கணினிகளும், இரண்டு பிரிண்டர்களும், இணையத்தொடர்பும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, கணினிக் கல்வியை வழங்குவதற்காகத் தகுதியுள்ளவர்கள் ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் - தற்போது பாடசாலைகளில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கும் தகவல் தொழிநுட்பத்தைக் கற்பிக்கக்கூடிய அளவுக்கு கணினி அறிவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# வடக்கு காணிகளை அளவிடும் பணியில் தெற்குப் பல்கலைக்கழக மாணவர்கள்!

## காணி அமைச்சர் ராஜித சேனாரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்திலுள்ள காணிகளை அளவீடு செய்யும் பணிகள் நோர்வேயின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நோராட் ஸ்தாபனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் பணிக்கான திட்டம்- நீதியமைச்சுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையிலேயே காணி அளவீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அளவீட்டுப் பணிகள் தொடங்கி மூன்று மாதகாலத்துக்குள் இந்தப் பணி முடிவடையும். சப்பிரகமுவ பல்கலைக்கழக நிலவளவைத் துறை மாணவர்களைக் கொண்டே அளவீடுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நிலவளவைத் திணைக்களத்தின் ஆவணங்கள், கோப்புக்கள் முற்றாக அழிந்துவிட்டதாலேயே, புதிதாக அளவீடுகளைச் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வை உடனடியாகக் காணவேண்டும்

## வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் தடங்கல்கள் ஏதுமின்றி தொடரவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் நேற்றுப் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மற்றும் அரசு - இப்பிரச்சினைக்கான தீர்வை உடனடியாக காணவேண்டும் என்பதை அரசுத் தலைவர் என்ற ரீதியிலும், பொதுமக்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், நிதியுதவி வழங்கும் நாடுகளும் இத்தீர்வு முயற்சியில் உதவவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். 1994 முதல் நாம் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானத்திற்கு தான் எதிரியல்ல என்றும் அதேசமயம் தற்போதைய சமாதான முயற்சிகள் தனக்கு முழுத் திருப்திதரவில்லை என்றும், சமாதான நடவடிக்கையால் இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படின், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் என்றும் எச்சரித்தார்.

### இலவசமாகக் கண்விழி வில்லைகள் விநியோகம்!

நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் கண்விழி வில்லைகள் இலவசமாக விநியோகிக்க - கழகத்தின் பங்குனிமாத ஆளுநர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, +21.0, +20.0, 22.00, 21.00 ஆகிய அளவுகளில் விழி வில்லைகள் தேவைப்படுவோர்- வைத்திய நிபுணரின் சிபார்சுடன் கழகத் தலைவர் வீ.எஸ்.சொக்கலிங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரச படையினர், போராளிகளுக்கு மனித உரிமை பயிற்சிப் பட்டறை!

## யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர்., ஐ.சி.ஆர்.சி. உதவி வழங்கும்

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் - ஹக்கோன் பேச்சுவார்த்தையில் இணக்கம் கண்டபடி- மனித உரிமைகள் பிரகடனம் ஒன்றையும், செயற்திட்டத்தையும் வகுத்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரச தரப்பு அறிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் அடிப்படையில் - சமஷ்டி மற்றும் சமாதானச் சட்டங்களுக்கு இசைவாக மனித உரிமை விடயங்கள் ஆராயப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை - மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை - அரசாங்க அதிகாரிகள், படையினர், சிறையதிகாரிகள் மற்றும் போராளிகளுக்கு நடாத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன மனித உரிமைகள் பற்றிய இந்த அறிவூட்டல் நிகழ்ச்சிகளுக்கு உதவிவழங்கவுள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலக அதிகாரிகள் - இந்தப் பயிற்சிப் பட்டறைகளை ஒருங்கிணைக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

# எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் நோர்வேயின் அமைதி முயற்சி தொடரும்!

## விடைபெற்றுச் செல்லும் தூதுவர் வெஸ்பேர்க் நம்பிக்கை



(கொழும்பு)

இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சியமைத்தாலும், எத்தகைய அரசியற்சூழல் மாற்றமடைந்தாலும் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளும், அமைதிப் பேச்சுக்களும் தொடருமென விடைபெற்றுச் செல்லும் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த வைபவமொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது - இலங்கையில் எத்தகைய அரசியல் மாற்றம் நடந்தாலும் அமைதி முயற்சிகள் தொடருமென்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

அமைதி முயற்சியாளர்கள் என்ற ரீதியில் நாம் அவ்வாறான மாற்றங்களைப்பற்றிக் கவலைப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி சந்திரிகா இந்தியா செல்கிறார்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - இரண்டுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு - அடுத்தவாரம் இந்தியா செல்கின்றார்.

இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் உட்பட முக்கிய இந்தியத் தலைவர்களை அவர் இவ்விஜயத்தின்போது சந்திக்கவுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் - இந்தியாவின் அதிகரித்துவரும் கரிசனையின் அடிப்படையிலேயே இந்த விஜயத்தின் நோக்கம் அமைவதாக இந்தியச் செய்திச்சேவைகள் தெரிவித்தன.

# இலங்கையில் 7200 பேருக்கு எயிட்ஸ் பீடிப்பு!

(பண்டத்தரிப்பு)

கடந்தவருட இறுதியில் மட்டும் இலங்கையில் எச்.ஐ.வி.வைரஸ் தாக்கத்திற்கு 455 பேர் இலக்காகி உள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை எயிட்ஸ் தாக்கத்திற்கு 7 ஆயிரத்து 200 பேர் உள்ளாகியிருப்பதாகக் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற எயிட்ஸ் நோய் ஒழிப்புத் தேசிய செயற்திட்டத்தின்போது இத்தகவல் வெளியிடப்பட்டது. (43)



ஜப்பான் நாட்டின் 16 பௌத்த துறவிகள் கொண்டகுழு நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டது. இவர்கள் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இராணுவப் பாதுகாப்புடனும், இராணுவத்தினர் பங்கேற்ற பலவித அணிவகுப்புடனும் ஆரியகுளச்சந்தியிலுள்ள விகாரைக்கு அழைத்துவரப்படும் காட்சிகளை இங்கு காணலாம். (படங்கள் - ராஜ்குமார்)

# ஆனையிறவு யாரிடம் உள்ளதோ யாழ்ப்பாணம் அவருக்குச் சொந்தம்!


தளபதி பால்ராஜ்

**ஆனையிறவு வெற்றிக்கு வித்திட்ட குடாரப்புத் தரையிறக்கம் பற்றி - கேணல் பால்ராஜ், அண்மையில் அத்தரையிறக்க வெற்றிவிழா வடமராட்சி கிழக்கில் நடைபெற்றபோது, ஆற்றிய உரையிலிருந்து....**



விடுதலைப் புலிகளால் ஆனையிறவுத் தளத்தை எவ்வாறு கைப்பற்றமுடியும் என எமது மக்களும், புலம்பெயர் மக்களும், வெளியுலகும் சந்தேகம் கொண்டிருந்தனர், நம்பிக்கை இழந்திருந்தனர்.

ஆனால், எமது தலைவரும், நாமும் உறுதியான நம்பிக்கையுடன்தான் இருந்தோம். இவ்வேளை தலைவர் எம்மை அழைத்து ஆனையிறவைக் கைப்பற்றவேண்டும். அதற்கான வேவு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என, எம்மைப் பணித்திருந்தார்.

அந்தவேளை, இங்கு சரியான காலநிலையில்லை. மாரிகாலமானதால் கடலடி அதிகரித்துக் காணப்பட்ட காலமாக இருந்தது. நாங்கள் முன் பக்கத்தால் பார்த்தால், ஐந்து மீற்றருக்கு ஒன்று என்ற வகையில் மிகவும் இறுக்கமான காவலரண்கள் கட்டைக்காட்டில் இருந்தன. ஊரியான் வரையும் மிகவும் நெருக்கமான காப்பரண் இருந்தது. தனங்கிளப்புவரையும் மிகவும் இறுக்கமான காவலரண்கள். தனங்களப்பிலிருந்து கொழும்புத்துறை வரை மிகவும் இறுக்கமான காவலரண்கள். அதனூடாக உள்நுழைவதென்றால் மிகவும் கடினம்.

கடற்பகுதியில் எவ்வாறு உட்செல்லவேண்டும், எவ்வாறு செயற்பட வேண்டுமெனத் தளபதி சூசை அவர்கள் தலைமையில் கடலாதிக்கத்தைச் சிறப்பாகச் செய்துகொண்டிருந்தனர் கடற்புலிகள். அப்போது நான்- சூசையிடம் கேட்டேன், எப்படியாவது கடலடிக்குள்ளால் இந்த வேவு அணியைத் தரையிறக்க வேண்டும். இதை எப்படியாவது நீங்கள் செய்தால்தான், நாங்கள் ஆனையிறவை மீட்பதற்கான வேவு நடவடிக்கையைச் சிறப்பாக மேற்கொள்ளமுடியும் எனக் கூறினேன். அதற்கு அவர், தான் நிச்சயமாகத் தரையிறக்குவதாக உறுதியளித்தார்.



## குடாரப்புத் தரையிறக்கம் பற்றி களமுனைத் தளபதியின் அனுபவம்!

அதற்கிணங்க மிகவும் திறமையான போராளிகளைவிட்டு, குடாரப்புப் பகுதிக்கு அப்பால், எமது வேவு அணிகளைக் கொண்டு சென்று மிகவும் பத்திரமாகத் தரையிறக்கினார்கள்.

தளபதி கோகுலன், தளபதி கலையழகன் தலைமையில் நாம் வேவுப் பணிகளை இணைத்திருந்தோம். மிகவும் இரகசியமாக எதிரியின் காப்பரண்களுக்கிடையில் ஊடுருவிப் பல நாட்களாகக் குறிப்பிட்ட உணவுப்பொருட்களுடன் ஆனையிறவுப் பகுதிக்குள்ளே இரண்டு மாதங்கள் அவர்கள் தங்கியிருந்தார்கள்.

தலைவர் அவர்களுக்கு எமது வேவு நடவடிக்கையை வரைபடம் மூலம் காட்டியபோதுதான் ஆனையிறவுக்குப் பின் பகுதியால் பல பாதைகள் எடுக்கப்பட்டன. அப்போது தலைவர், வரைபடத்தைப் பார்த்துவிட்டுக் கூறினார்- யுத்தம் ஆனையிறவில் அல்ல, குடாரப்புவில்தான். அடுத்தது இத்தாவிலில்தான். அப்போது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. எத்தனை கிலோ மீற்றருக்கு அப்பால் இந்த இராணுவமுகாம் இருக்கிறது. இந்தக் குடாரப்புப் பகுதியில் யுத்தம் என்கின்றாரே. அதில் இரண்டு டிவிசன் இராணுவம் இருக்கிறது என நான் கூறினேன். அப்போது தலைவர் கூறினார்- இரண்டு டிவிஷன்கள் அல்ல. நான்கு டிவிஷன்களாக இருந்தாலும் சரி, இங்கேதான் யுத்தம். இதைத் துண்டாடி அறுத்து நிச்சயமாக அனைத்தையும் அழித்துவிடுவேனென உறுதியாகக் கூறினார்.

அதன்பின் திட்டம் விளங்கப்படுத்தப்பட்டது. நிச்சயமாக இதை வென்றே தீரவேண்டும் என்பதையும், நிச்சயமாக உங்களைக் கொண்டு சென்று தரையிறக்குவேன். ஆனால், உங்களைத் திருப்பியேற்றுவதற்கு வண்டி அனுப்பமாட்டேன். நீங்கள் வருவதானால் கண்டிவீதியால் தான் வரவேண்டும் எனவும் தலைவர் கூறினார்.

இத்தகைய கருத்துக்கள்தான் நிச்சயமாக எம்மை வெற்றிகொள்ள வைத்தது என நான் கூறுவேன். தலைவரது திட்டம் எங்களுக்கு மிகவும் தெளிவாக இருந்தது. எதிரி இந்த நடவடிக்கையின்போது என்ன செய்வான், எவ்வாறு செயற்படுவான், எத்தகைய பிரச்சினைகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டிவரும், எவ்வாறு நாங்கள் செயற்படவேண்டும். இந்த யுத்தம் மாதக்கணக்கிலும் நடக்கலாம் என்பதைப் பற்றியெல்லாம் சகல தளபதிகளுக்கும் விரிவாக எடுத்துக்கூறியிருந்தார் தலைவர்.

(நாளை தொடரும்...)

# யாழ்.மாவட்ட விளையாட்டுவிழா 11 ஆம் திகதி ஆரம்பமாகின்றது!

## பல்வேறு இடங்களிலும் போட்டிகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் 2003 ஆம் ஆண்டுக்கான யாழ்.மாவட்ட விளையாட்டு விழா பல்வேறு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

இதன்படி ஆண்-பெண் இருபாலாருக்குமான எல்லே விளையாட்டு- 11 ஆம், 12 ஆம் திகதிகளில் வீனஸ் விளையாட்டு மைதானத்திலும்,

கபடிப் போட்டி- 16 ஆம் திகதி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்திலும்,

மென்பந்தாட்டப் போட்டி- 19 ஆம், 20 ஆம் திகதிகளில் துரையப்பா விளையாட்டரங்கிலும்,

கரப்பந்தாட்டப் போட்டி - 26 ஆம், 27 ஆம் திகதிகளில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டு மைதானத்திலும்,

உதைபந்தாட்டப் போட்டி- 23 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுகழக மைதானத்திலும்,

வலைப்பந்தாட்டப் போட்டி- 29 ஆம் திகதி மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் யாவும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ப.திலகநாயகம் போல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரியும், ஏனைய விளையாட்டு அதிகாரிகளும் மேற்கொண்டு வருகின்றனர். (சு)

# மாங்குளம் முதல் கிளிநொச்சி வரை மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி!

## புத்தாண்டு தினத்தன்று நடக்கிறது

வன்னிமாவட்ட விளையாட்டுத்துறையினர் நடாத்தும் மாபெரும் மரதன் ஓட்டம்- சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இம்மரதனோட்ட நிகழ்வு மாங்குளத்தில் ஆரம்பமாகி கிளிநொச்சி மத்திய மைதானத்தை வந்தடையவுள்ளது.

இப்போட்டியில் .கிளிநொச்சி, முல்லை மாவட்ட போட்டியாளர்கள் பங்குகொள்ளலாம் எனவும், பங்குகொள்ள விரும்புபவர்கள்- எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாகத் தமிழீழ விளையாட்டுத்துறையின் வன்னி மாவட்ட விளையாட்டுத்துறைச் செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (108)

# நான்கு பாடசாலைகளில் தரம் 9 வகுப்புக்கு அனுமதி!

(அராலி)

வலிகாமம் கல்வி வலயத்தில் 4 பாடசாலைகளில் தரம் 9 இற்கான வகுப்புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள வித்தியாலயம், அராலி கிழகக்கு அ.மி.த.க. பாடசாலை, தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம், அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இப்புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பாடசாலைகளில் இதுவரை தரம் 8 வரையிலான வகுப்புகள் மட்டுமே நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (118)

# பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலக நடமாடும் சேவை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் பிறப்பு, இறப்புப் பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாதவர்களின் நலன்கருதி, யாழ்.மேலதிக பதிவுகாரர் அலுவலகத்தினர்- தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவையினை விரைவில் நடாத்தவுள்ளனர்.

கோவில் குடியிருப்பு, சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் - பிறப்பு, இறப்புப் பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாதவர்கள் உரிய ஆவணங்களுடன் தத்தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (34)

# மந்திகை மருத்துவமனை கதிரியக்கப்பிரிவு தொடர்ந்தும் செயலிழந்து காணப்படுகிறது!

(பண்டத்தரிப்பு)

மந்திகை மருத்துவமனையின் கதிரியக்கப்பிரிவு தொடர்ந்தும் செயலிழந்தநிலையிலேயே உள்ளது.

இதனால், மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுள் கதிர்ப் படம் எடுக்கவேண்டியவர்கள் தினமும் அம்புலன்ஸ் வண்டிமூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படுகின்றனர். (43)


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



மூன்றாவது அகவையில்



பெயர் :க.சுகீரதன்
முகவரி: மீசாலை கிழக்கு, மீசாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:-----------------------------------
முகவரி :-----------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------
பெற்றார் ஒப்பம்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்







# மாணவர் மலர்

(1) கீழே தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிகளுக்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.

> ஞாயிற்றுக்கிழமை காலை [1] வரையலாம் என்று உட்கார்ந்தால், சுரேஷ் வந்துவிட்டான். சுரேஷ் அவனது நெருங்கிய நண்பன். அவனோடு [2] வேலையைத் தொடங்கினான். எப்படி வரைவது என்று யோசித்தபோது, அவனது மற்றொரு [3] குமாரின் நினைவு வந்தது. குமாரின் அப்பா பெரிய ஓவியர். அவரிடம் யோசனை கேட்கலாம் என்று நினைத்தான். குமாரின் வீட்டிற்குப் புறப்பட்டான். குமாரின் [4] வீட்டில் இல்லை. மாலைதான் வருவார் என்று குமார் கூறினான்.

1. முதலாவது கட்டமிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்

(1) கடிதம் (2) ஓவியம் (3) கவிதை

2. இரண்டாவது கட்டமிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.

(1) விளையாடிவிட்டு (2) உணவருந்திவிட்டு (3) உரையாடிவிட்டு

3. மூன்றாவது கட்டமிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்

(1) நண்பன் (2) சகோதரன் (3) மாணவன்

4. நான்காவது கட்டமிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.

(1) சிறியதந்தை (2) மாமா (3) தந்தை

(2) கீழே தரப்பட்டுள்ள பகுதியை வாசித்து வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.

> எனக்கு இப்போது ஓரளவு சுகம். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். எனது இரண்டு சகோதரிகளும் கவனமாகப் படிக்கின்றார்களா? படிப்பிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்கவும். ஏதும் தேவை என்றால் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். அப்பா இல்லாத குறை தெரியாமல் சகோதரிகளை வளர்க்க வேண்டும். அதற்காக அவர்கள் கேட்பதையெல்லாம் வாங்கிக்கொடுக்க வேண்டாம். தேவையறிந்து வாங்கிக் கொடுக்கவும். அடுத்த வருடம் லீவு கிடைத்தால், எனது தாய் நாட்டிற்கு வருவேன். நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்.

1. இக்கடிதத்தைத் தாய்க்கு மகன் எழுதியுள்ளார்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

2. இக்கடிதத்தை எழுதியவருக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

3. இக்கடிதத்தை எழுதியிருப்பவர் நோய்வாய்ப்பட்டுள்ளார்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

4. இக்கடிதத்தை எழுதியிருப்பவர் சகோதரிகள் மீது அளவில்லாத பாசம் வைத்துள்ளார்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

5. இக்கடிதத்தை எழுதியிருப்பவர் அடுத்த வருடம் கட்டாயம் வீட்டிற்கு வருவார்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

6. இக்கடிதம் வெளிநாட்டிலிருந்து எழுதப்பட்டுள்ளது.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

7. இக்கடிதத்தை எழுதியிருப்பவருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளமுடியும்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

8. இக்கடிதம் எழுதியிருப்பவருடைய தந்தை இறந்துவிட்டார்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

9. இக்கடிதம் எழுதியிருப்பவர் படிப்பின் மீது அக்கறையுள்ளவர்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

10. இக்கடிதத்தை எழுதியிருப்பவருக்குத் தாய்நாட்டிற்கு வருவதற்கு விருப்பமில்லை.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது.

(3) கீழே தரப்பட்டுள்ள விபரங்களைக் கவனமாக வாசித்து நேர அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| பல் வைத்தியர் பார்வையிடும் நேரம் | | |
|---|---|---|
| **தொடக்கம்** | **வரை** | |
| மு.ப. 9.15 | ............... | சிறுவர்கள் (75 நிமிடங்கள்) |
| ............... | மு.ப. 11.15 | பெண்கள் (45 நிமிடங்கள்) |
| பி.ப. 2.15 | ............... | பெரியவர்கள் (90 நிமிடம்) |

(4) பின்வரும் பிரசினங்களைத் தீர்க்குக.

1. ஒரு பண்ணையில் 647 கோழிகள் இருந்தன. அவற்றுள் 218 கோழிகள் விற்கப்பட்டன எனின், மிகுதியாக உள்ள கோழிகள் எத்தனை?
(........................)

2. ஒரு கடையில் 50 அப்பிள்களும், இன்னொரு கடையில் 25 அப்பிள்களும் இருந்தன. அவற்றை ஒருகுவியலுக்கு 5 வீதம் அடுக்கினால் எத்தனை குவியல்கள் இருக்கும்?
(........................)

3. ஒரு கோட்டின் நீளம் 3 மீற்றர் 12 சென்ரிமீற்றர் ஆகும். இன்னொரு கோட்டின் நீளம் 38 சென்ரிமீற்றர் ஆகும். இரு கோடுகளின் மொத்த நீளம் யாது?
(........................)

4. விஜியிடம் 8 ரூபாய் உள்ளது. 3 ரூபாய் 25 சதம் பெறுமதியுள்ள இரு பயிற்சிப் புத்தகங்களை வாங்கியபின், அவளிடம் மீதியாக எவ்வளவு பணம் இருக்கும்?
(........................)

5. ஒரு பைக்கற்றில் 24 இனிப்புக்கள் வீதம் 13 பைக்கற்றுக்களில் எத்தனை இனிப்புக்கள் இருக்கும்?
(........................)

6. காந்தன் கொப்பியொன்றை 8 ரூபா 50 சதத்திற்கு வாங்கிய பின்னர், 10 ரூபா காசுத்தாளைக் கொடுத்தான். கடைக்காரர் அவனிடம் இன்னும் 50 சதம் கேட்டு வாங்கினார். இப்போது காந்தனுக்குக் கிடைக்கவேண்டிய மீதிப்பணம் எவ்வளவு?
(........................)

7. முருகனும் காந்தனும் சைக்கிளோட்டப் போட்டியொன்றில் கலந்துகொள்கின்றனர். முருகன் 1 மணித்தியாலம் 15 நிமிடத்திலும், காந்தன் 75 நிமிடங்களிலும் வெற்றிக் கம்பத்தை அடைகின்றனர். இவர்களுள் முதலில் வெற்றிக்கம்பத்தை அடைந்தவர் யார்?
(........................)

8. ஒரு நாடக அரங்கத்திற்குத் தேவையான கதிரைகள் மூன்று இடங்களிலிருந்து பெறப்பட்டன. அவை முறையே 750, 650, 800 ஆகும். அவற்றை நிரைக்கு 50 கதிரைகள் வீதம் ஒழுங்கு செய்தால் எத்தனை நிரைகளில் வைக்கலாம்?
(........................)

9. ஒரு நிறப்பெட்டியின் விலை ரூபாய் 18.50 சதமாகும். ஒரு கேத்திரகணிதப் பெட்டியின் விலை மூன்று மடங்கிலும் ரூபாய் 2.50 சதம் கூடுதலாகும். எனவே, கேத்திரகணிதப் பெட்டியின் விலை என்ன?
(........................)

10. சங்கரிடமும் குமாரிடமும் 300 மாபிள்கள் உள்ளன. சங்கர் குமாருக்கு 50 மாபிள்களைக் கொடுத்தபொழுது, இருவரிடமும் சமவளவான மாபிள்கள் இருந்தன. எனவே குமாரிடம் ஆரம்பத்திலிருந்த மாபிள்கள் எத்தனை?
(........................)

(5) கிழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | |
|---|---|
| கனவுரு  | உச்சி =<br>விளிம்பு =<br>முகம் = |
| சதுரமுகி  | உச்சி =<br>விளிம்பு =<br>முகம் = |
| நான்முகி  | உச்சி =<br>விளிம்பு =<br>முகம் = |
| கூம்பகம்  | உச்சி =<br>விளிம்பு =<br>முகம் = |
| கூம்பு  | உச்சி =<br>விளிம்பு =<br>முகம் = |
| உருளை  | உச்சி =<br>விளிம்பு =<br>முகம் = |
| அரியம்  | உச்சி =<br>விளிம்பு =<br>முகம் = |

(6) நான் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது ........................ என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தபட்சம் நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

(1) ........................................................................
(2) ........................................................................
(3) ........................................................................
(4) ........................................................................
(5) ........................................................................
(6) ........................................................................

*(விடைகள் - அடுத்தவார மாணவர் மலரில்)*

(தொடரும்....)

வி.என்.எஸ்.உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.



# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை பொருளியல் மாதிரி வினாத்தாள்



(1). பொருளியலில் அருமைப்பாடு என்ற எண்ணக்கரு பற்றி விளங்கிக் கொள்வது யாது?

பொருளியல் அருமை என்பது சமூகத்தின் தேவைகளையும், அத்தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள், முடிவுப்பொருட்கள், சேவைகளைத் தொடர்வுபடுத்திக் கூறுகிறது.

சமூகத்தின் தேவைகள் வரையறை அற்றவை. அளவிட முடியாதவை. வளங்கள் வரையறுக்கப்பட்டவை. அளவிடக் கூடியவை. எனவே வரையறையற்ற சமூகத்தின் தேவைகளுடன் ஒப்பிடும்போது, வரையறுக்கப்பட்ட வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதே பொருளியலில் அருமை என அழைப்பர்.

(2). பொருளியலில் எல்லா வளங்களையும் அறிஞர்கள் அருமையானதா எனக் கூறுகிறாரா?

மனித தேவைகளோடு, சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடும்போது வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுதலையே பொருளியல் அறிஞர்கள் வளங்கள் அருமையாக உள்ளது எனக் கூறியுள்ளனர்.

அதாவது, வரையறையற்ற சமூகத்தின் தேவைளோடு ஒப்பிடுகின்றபோது, வரையறுக்கப்பட்டதான வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுதலையே வளங்கள் அருமையாகவுள்ளது எனக் கூறுகின்றார்.

ஆனால் எல்லா வளங்களையும் அருமை என்று கூறவில்லை. சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடும்போது பற்றாக் குறையின்றி ஓர் வளம் ஏராளமாகக் கிடைக்குமாயின் அதனை பொருளியலில் அறிஞர் ஒருபோதும் அருமை எனக் கூறுவதில்லை.

(3). இலங்கையில் பெருமளவு ஊழியர் வளம் பயன்படுத்தப்படாது இருக்கின்றது. அப்படியாயின் இலங்கையில் வளங்கள் அருந்தலாகவுள்ளது. எந்தளவிற்கு இது சரியானது எனக்கூறுவீர்?

இலங்கையில் பெருமளவு ஊழியர்வளம் காணப்படுகிறது என்பது இலங்கையிலுள்ள ஏனைய உற்பத்திக் காரணிகளோடு ஒப்பிட்டுக் கூறப்படுகின்றது. குறிப்பாக மூலதனத்தோடு.

மேலும், பெருமளவு ஊழியர் வளம் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கான காரணம்- அவை தேவைக்கு மேலதிகமாக உண்டு என்பதனால் அல்ல. உண்மையில் உழைப்பைப் பெருமளவு பயன்படுத்தாமல் இருப்பதே காரணம். அவற்றை உற்பத்தியில் ஈடுபடுத்த தேவையான மூலதனம் மற்றும் இணைப்பு காரணிகள் போதிய அளவு இல்லாமையே ஆகும். எனவே வரையறையற்ற சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடும்போது, வரையறுக்கப்படாத வளங்கள் அருந்தலாக உள்ளது எனக்கூறுவது சரியானதாகும்.

(4). யாழ்ப்பாணத்தில் தற்போது பயன்படுத்தப்படாமல் பெருமளவு நிலம் காணப்படுகிறது. அப்படியாயின் இந்த வளங்கள் அருந்தலாகவுள்ளது எனக்கூறுவது எந்தளவிற்குச் சரியானது?

*3 ஆம் வினாவிற்கு உரிய விடை பொருத்தமானது.*

(5). பின்வரும் கூற்றை ஒப்புக்கொள்கிறீரா? உமது விடைக்குக் காரணம் தருக?

வளர்முக நாடுகளில் மட்டும் வளங்கள் அருந்தலாக உள்ளது.

இந்தக் கூற்றை ஒப்புக்கொள்ள முடியாது. வளர்முக நாட்டில் மட்டுமன்றி வளர்ச்சி அடைந்த நாட்டிலுமே வளங்கள் அருந்தலாகவுள்ளது. வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போது, வளர்ச்சியடைந்த நாட்டில் வளங்கள் கூடுதலாகக் காணப்படலாம். ஆனால், அதற்கு வளங்களின் அருமைத்தன்மை எப்பொழுதும் சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிட்டுக் கூறப்படவேண்டும். வளர்முக நாடாயினும் சரி, வளர்ச்சியடைந்த நாடாயினும் சரி, அபிவிருத்தியடைந்த நாடாயினும் சரி சமூகத்தின் தேவைகள் வரையறை அற்றவை. வளம் வரையறுக்கப்பட்டது. எனவே - வரையறை அற்ற சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடும்போது வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. இது எங்கும் நிலவுகிறது.

(6). பின்வரும் நிலமை தொடர்பாகக் கருதப்படும் தேவை அருமையாகவுள்ள மூலவளம் மாற்று உபயோகம், அமையச்செலவு என்பன சுட்டிக்காட்டப்பட வேண்டும்?

1. வெளிநாட்டு அரசாங்கம் ஒன்று நாட்டின் தெருவள அமைப்பை நவீன மயமாக்குவதற்கு இன்றியமையாத இறக்குமதிப்பொருளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்த என 100 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கத் தயாராகவுள்ளது. இவ்வேலையை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் உள்நாட்டுச் செலவு 100 மில்லியன் ரூபா தொகையை இலங்கை அரசு தனது வருமான மூலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் வெளிநாட்டு நன்கொடை வழங்கல் ஏற்பதா அல்லது இல்லையா என்ற பிரச்சினை எதிர்கொண்டுள்ளது.

விடை -

இலங்கை அரசு வெளிநாட்டு அரசிடமிருந்து நன்கொடை பெற்றால் தெருவள அமைப்பை நவீனமயப்படுத்த வேண்டும். எனவே - இந்நிதிக்கு மாற்றுபயோகம் இல்லை. ஆதலால் அமையச்செலவு தோன்றாது. மேலதிக நிதியான 100 மில்லியன் ரூபாவிற்கு மாற்றுபயோகம் உண்டு. அதாவது இதனை அரசு தனது வருமான மூலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும்போது தெருவள அமைப்பை நவீனமயப்படுத்தப் பயன்படுத்தலாம். தெருவள அமைப்பை நவீனமயமாக்கும்போது, 100 மில்லியன் ரூபாவுக்கான மற்றய தேவை அல்லது உபயோகம் இழக்கப்படும். இது அமையச்செலவாகும்.

எனவே - இலங்கை அரசு வெளிநாட்டு நன்கொடையை ஏற்பதா அல்லது இல்லையா என்பது தெருவள அமைப்பு நவீனமயத்திட்டத்தையும் ஒப்பிட்டு முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

2. விவசாயி ஒருவன் வங்கி ஒன்றில் 50,000 ரூபாவை நிலையான வைப்புப் பணமாக வைத்திருக்கிறான். இவ்வைப்பின் மீது அவர் 20 சதவீத வட்டி பெறுகின்றார். இப்பணத்தில் தனது சொந்த உபயோகத்திற்கும், வாடகைக்கு விடுவதற்கும் என ஒரு விவசாய இயந்திரத்தைக் கொள்வனவு செய்யலாமா என அவர் சிந்திக்கிறார்.

விடை -

குறிப்பிட்ட விவசாயி வங்கியில் 50,000 ரூபாவை வைப்பாக வைத்திருப்பதன் மூலம் வருடம் 10,000 ரூபா வட்டி சம்பாதிக்கிறான். இந்நிலையில் அவர் இந்நிதியை விவசாய இயந்திரக் கொள்வனவுக்குப் பயன்படுத்தினால் 10,000 ரூபா வட்டி வருமானம் இழப்பார்.

மாறாகத் தொடர்ச்சியாக வைப்பில் இட்டால் தனது சொந்தப் பாவனையையும், வாடகை வருமானத்தையும் இழப்பார். இதுவே அவருக்கான அமையச்செலவு ஆகும்.

எனவே - எதை மேற்கொள்வது என்பது வட்டி வருமானத்தையும், எதிர்பார்க்கும் வாடகை வருமானத்தையும், சொந்தப்பாவனையையும் ஒப்பிட்டு முடிவுக்கு வரவேண்டும்.

3. உயர்தரப் பரீட்சையின் பெறபேற்றின் அடிப்படையில் அல்லது தகைமையினால் பல்லைக்கழகம் ஒன்றிற்கு அனுமதி பெறவேண்டும் எனக் கருதுக. அதேசமயம் 1000 ரூபா சம்பளத்துடன் வேலை முன்வைக்கப்படுகிறது எனக் கொள்க. பல்லைக்கழகம் போவதா அல்லது வேலையை ஏற்பதா என்ற பிரச்சினைக்கு ஆளாகிறீர்?

விடை -

இப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுப் பல்லைகலைக்கழகம் போவேனாயின், மாதம் 1000 ரூபா சம்பளத்தைக் குறைந்தது 4 வருடத்திற்கு இழப்பேன். மாறாக வேலையை ஏற்பேனாயின், பல்கலைக்கழகம் தொடர்பான உயர்கல்வி, சமூகமதிப்பு, அரச உதவிப்பணம், எதிர்கால நல்ல வேலை வாய்ப்பு, உயர் வருமானம் என்பவற்றை இழக்கநேரிடும். இதுவே அமையச்செலவாகும். இதை ஒப்பிட்டு முடிவுக்கு வரவேண்டும்.

(7) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

(1) பொருளாதாரப்பண்டம், இலவசப்பண்டம் என்பவற்றை வேறுபடுத்தும் காரணி அருந்தலாகும். ( )

(2) பொருளாதாரப் பண்டத்திற்கு விலை உண்டு. பாடசாலை மாணவனுக்கு வழங்கப்படும் பாடப்புத்தகம் விலை செலுத்தாமல் வழங்கப்படுகிறது. ஆகவே, அப்பாடப் புத்தகம் கட்டில்லாப் பண்டமாகும். ( )

(3) மக்கள் வாழ்க்கைக்கு அவசியமான எல்லாப் பண்டங்களும் சிக்கனப் பண்டங்கள் ஆகும். ( )

(4) கனடாவிலிருந்து நண்பனால் எனக்கு அனுப்பப்பட்ட பேனா இலவசப்பண்டமாகும். ( )

(5) பசு தன் கன்றுக்குக் கொடுக்கப்படும் பால் இலவசப் பண்டாகும். ( )

(6) தென்றல் காற்று ஒரு பொருளாதாரப் பண்டமாகும். ( )

(7) ஒரு பொருள் நுகரப்படுகிறது என்றால், அந்த ஒரு பொருளின் ஒருபகுதி குறைவடைந்ததாகும். ( )

(8) பொருட்கள், சேவைகள் வேறுபடுத்தும் அடிப்படைக் காரணி அருந்தலாகும். ( )

(9) குடும்பத்தலைவி தமது விட்டிலாற்றும் சேவை இலவசப்பண்டமாகும். ( )

(10) பிச்சை எடுப்பது ஒரு பொருளாதாரப் பண்டமாகும். ( )

சரியானதன் கீழ் கோடிடுக.

(1) மனித தேவை சம்பந்தமாக ஒவ்வாத கூற்று?

1. எண்ணிறைந்தன.
2. மீண்டும் மீண்டும் தோன்றக்கூடியது.
3. பெருகிச்செல்வன.
4. வரையறைக்குள்ளாமை.

(2) நுகர்வு என்பதன் கருத்து

1. உணவை உண்டு.
2. யாதேனும் தேவையை நிறைவுசெய்யப் பொருட்கள் சேவையை உருவாக்குவது.
3. பொருட்கள் சேவைகளின் இருந்ததான பயன்பாட்டைப் பெற்று முடிப்பது.
4. மனிதன் வாழ்வதன் நோக்கம்.

(3) ஒரு பொருளை நுகரும்போது அப்பொருள் தீர்ந்து விடலாம் அல்லது தீர்ந்து போகாமலும் விடலாம். பொருள் தீர்ந்து போகாத நுகர்வு நடத்தைக்கு உதாரணம்?

1. பசிக்கு உணவு அருந்தல்.
2. தாகத்திற்குத் தண்ணீர் குடித்தல்.
3. பத்திரிகை வாசித்தல்.
4. கடதாசியில் எழுதுதல்.

(4) பொருளாதார நடவடிக்கையின் இறுதி நோக்கம்?

1. உற்பத்தி
2. நுகர்வு
3. பங்கீடு
4. சேமிப்பு

(5) இலவசப்பண்டம் என்பவை யாவை? எவை?

1. இயற்கையால் வழங்கப்பட்ட கொடை.
2. மனித தேவையுடன் ஒப்பிடும்போது வரையறுக்கப்பட்டவை.
3. இவற்றுக்குப் பெறுமதி மதிப்பிடுவது இல்லை.
4. வளி, நீர், சூரிய ஒளி.
5. மனிதனின் உற்பத்திகள்.
6. இவற்றின் நுகர்விற்குச் சந்தர்ப்பக் கிரயம் உண்டு.

(6) பொருளாதாரப் பண்டம் என்பது எவை?

1. சிக்கனப் பொருள்.
2. இலவசம் இல்லாப் பண்டம்.
3. பெறுமதி உடையவை.
4. மனித தேவையுடன் ஒப்பிடும்போது வரையறை அற்றன.
5. வாய்ப்புச் செலவு கொண்டது.
6. தேவையோடு ஒப்பிடும்போது பற்றாக்குறைானவை.
7. உரிமை பாராட்டப்பட்டமை.

(7) பின்வருவனவற்றில் இலவசப்பண்டமாகக் கொள்ளக்கூடியவை எவை?

1. இலவசக் கல்வி.
2. மண்.
3. மழைநீர்.
4. இலவசக் குழாய் நீர்.
5. வீசும் காற்று.
6. வீட்டு யன்னல் ஊடாக வரும் காற்று.

(8) இலவசப்பண்டம்- பொருளாதாரப் பண்டமாக மாறும் சந்தர்ப்பம் எவை?

1. நன்னீர், உப்பு நீர் பிரதேசங்கள்.
2. தூரதேச மக்கள்- மத்திய தரைத்தேசத்திற்கு வந்துபெறும் சூரிய ஒளி.
3. நிலமட்டத்திற்கும் 100 அடி உயரத்திற்கு இடைப்பட்ட காற்று.
4. மத்திய நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் சூரிய ஒளி.
5. மகாவலி திசை திருப்பும் திட்டத்தில் பெறப்பட்ட நீர்.

**எஸ். சிவசெந்தூரன்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## சட்டியிலிருந்து அடுப்புக்குள்...!

யாழ்.நகரப் பகுதியின் மையத்தில் நிலைகொண்டிருக்கும் படையினரை இடமாற்றுவதாகக் கூறிக்கொண்டு - நகரின் இன்னுமொரு முக்கிய பகுதியில் பாரிய இராணுவத்தளம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் - மக்களினதும் பொது அமைப்புக்களதும் எதிர்ப்புக்களையும் மீறி இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

மக்களின் எதிர்ப்புணர்வையும், தமது கடுமையான ஆட்சேபத்தையும் தெரிவித்து - விடுதலைப் புலிகளால், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்குக் கடிதம் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டேல்களிலிருந்து இராணுவ பிரிகேட் தலைமையகத்தை அகற்றுவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் - பிரபலமான இரண்டு பாடசாலைகள், பொதுநூலகம், துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள நீதிமன்ற வளாகம் ஆகியவற்றுக்கருகில் - இராணுவத்தளம் அமைக்கப்படுவதைத் தாம் ஆட்சேபிப்பதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

உண்மையில் - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்மானத்திற்கமைய - உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே அமைக்கப்பட்ட இராணுவ நிலைகளை அகற்றும் போக்கானது - இழுபறி நிலையிலும், கால தாமதத்துடனும் இருந்துவரும் நிலையில் - இப்போது இருக்கும் இராணுவ முகாம்களை மீள அமைத்தல் (Re Location) என்பது, இராணுவத்தரப்பால் எவ்விதமான அர்த்தத்திற் கொள்ளப்படுகின்றது என்பது பிரச்சினைக்குரியதாகவே உள்ளது.

மக்களது சுமுக வாழ்வை உறுதிப்படுத்தும் நோக்குடனும், மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்துவதற்காகவும் - இராணுவ நிலைகளை அகற்ற வேண்டும், வேறிடங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டபோது - அதனை ஏற்றுக்கொண்டு, குறிப்பிட்ட கால அவகாசத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் அறிவித்தது.

ஆனால் - அரசாங்கம் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள், உருப்படியான விளைவுகளை அதனால் தரமுடியவில்லை என்பதோடு - இராணுவ நிலைகளை மீள அமைத்தல் என்பதும் - தவறான பாதையில் நகர்த்தப்படுவதாகவே தெரிகின்றது.

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான வளாகம் என்பது - தற்போது பற்றைகளும், இடிந்த கட்டடங்களும் கொண்ட நிலப்பரப்பாகக் காணப்பட்டாலும் - யாழ்.நகரின் புனரமைப்பில், மீள் கட்டுமானத்தில் அப்பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

ஏற்கனவே - பல முக்கியமான மையங்களைக் கொண்டிருந்த அப்பகுதியில், கட்டம் கட்டமாக அவற்றை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதேவேளை - ஏற்கனவே அப்பகுதியில் இயங்கி வரும் பாடசாலைகளும், விளையாட்டரங்கமும், பொதுநூலகமும் - பெருமளவு மக்கள் வந்து செல்லும் இடங்களாக, சுமுகமான - சுதந்திரமான நடமாட்டம் அவசியமான பகுதிகளாக இருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இவ்வாறான நிலையில் - அப்பகுதியில் இராணுவ முகாமொன்றை அமைக்க முற்படுவதானது - ஒரு பக்கம் தமது முகாமொன்றைத் தளர்த்திக்கொண்டு, மறுபக்கம் மக்களது நடமாட்டத்தை, செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் முரண்நோக்குக் கொண்ட நடவடிக்கையாகவே உள்ளது.

அரசாங்கத்தரப்பு ஏற்றுக்கொண்டபடி - இராணுவ நிலைகளை மீள அமைத்தல் என்பது - 'சட்டியிலிருந்து தப்பி அடுப்புக்குள் விழுந்த கதை' யென மக்களுக்கு நெருக்குதலைத் தரும் செயற்பாடாக இல்லாது - அர்த்தபூர்வமானதாகவும், அமைதிக்கு விசுவாசமானதாகவும் இருக்க வேண்டும்.

எனவே - இராணுவத்தரப்பு, தனது நடவடிக்கையை நிறுத்தி - புலிகளுடன் கலந்தாலோசித்து - மக்களது சுமுக நிலைக்குப் பாதிப்பைத் தராத வகையில் - இராணுவ நிலைகளை மாற்றியமைக்கும் செயற்பாட்டை மேற்கொள்வதே பொருத்தமுடையதாக, நியாயமானதாக இருக்கும்.

# வைகோ, நெடுமாறனை விடுவிக்க தமிழகத்தில் போராட்டம் தொடரும்!

## உண்ணாவிரதத்தில் கருணாநிதி அறிவிப்பு


கருணாநிதி


வைகோ

(சென்னை)

பொடா சட்டத்தை இந்திய மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் உள்ளிட்டோரை விடுதலை செய்யக்கோரி, சென்னை வள்ளுவர் கோட்டம் முன்பு கடந்த சனியன்று நடைபெற்ற உண்ணாவிரதத்தைத் தொடக்கிவைத்து கருணாநிதி பேசும்போதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசும் போது - பயங்கரவாதத்தை எதிர்த்தே பொடாசட்டம் கொண்டு வரப்பட்டதாக அன்று மத்திய அரசு கூறியது. மேலும், இந்தச் சட்டம் அரசியற் கட்சிகளுக்கு எதிராகத் தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாதெனவும், அன்று துணைப் பிரதமர் அத்வானி உறுதியளித்தார். எனவேதான் - பொடாவிற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் தி.மு.க. வாக்களித்தது என்று கூறினார்.

ஆனால் - இன்று சிறுகுழந்தையின் கையில் கொடுக்கப்பட்ட கத்தியால் அது தாயாரைக் குத்திவிட்டதுபோல், பொடாவைப் பயன்படுத்தியுள்ளது தமிழக அரசு. பொதுக் கூட்டத்தில் எதையோ பேசினார்கள் என்று- வைகோ, நெடுமாறன் உள்ளிட்டோரைக் கடந்த சில மாதங்களாகச் சிறையில் தள்ளியுள்ளார்கள் என்றும் குறிப்பிட்ட கருணாநிதி - எனவே, பொடா சட்டத்தை மத்திய அரசு திருப்பிப்பெற வேண்டும் எனவும் கூறினார்.

வைகோ, நெடுமாறன் உள்ளிட்டோரை வெளியில் கொண்டு வரப் போராட்டங்கள் தொடரும் என்றும், இந்தப் போராட்டங்களில்தான், சிறை செல்லவும் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள வைகோ, நெடுமாறன் உள்ளிட்டோரை விடுதலை செய்யக்கோரி கடந்த சனிக்கிழமை சென்னை உட்பட மாவட்ட தலைநகரங்களில் அனைத்துக் கட்சிகளின் உண்ணாவிரதங்கள் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசியதாகப் பொடா சட்டத்தின் கீழ் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உட்பட அக் கட்சியின் 9 பேரும், தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் உட்பட அக்கட்சியின் 5 பேரும் தமிழக அரசால் கைதுசெய்யப்பட்டு, பல் வேறு சிறைகளில் கடந்த பல மாதங்களாக அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுதலை செய்யக் கோரியும், பொடா சட்டத்தை தமிழக அரசு தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டித்தும், தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்பதென் தி.மு.க, ம.தி.மு.க, சி.பி.ஐ, பா.ம.க, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் முடிவுசெய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# முஸ்லிம்களின் தனித்துவ அடையாளம்; அங்கீகரித்த சக்தி விடுதலைப் புலிகளே!

## பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் பாராட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளே முஸ்லிம்களுக்கான தனித்துவ அடையாளத்தை அங்கீகரித்துள்ளார்கள். நாம் இரண்டு வேறுபட்ட அடையாளங்களோடு ஒரே அரசியற்பாதையில் சமூக, பொருளாதார, கலாசார உறவுகளைப் பேணும் வகையில் செயற்பட வேண்டும் என்று வீடமைப்பு பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறு மூலை, ஏறாவூர், கரடியனாறு, ஆயித்தியமலை கமநலசேவை நிலையங்களுக்குட்பட்ட முஸ்லிம் விவசாயிகளுடனான சந்திப்பில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அரசியல் இலக்கை ஒரேபாதையில் இட்டுச்செல்ல இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழ் - முஸ்லிம் உறவை வலுப்படுத்தும் கடமை தமிழ் மக்கள்- புலிகளுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் உண்டு எனவும் -

இரு சமூகங்களும் ஒருவரில் ஒருவர் தங்கியுள்ளார்கள். முஸ்லிம்களைப் புறந்தள்ளியோ, தமிழர்களைப் புறந்தள்ளியோ வாழமுடியாது. இரு இனங்களும் எப்போதும் உறவாக இருக்க வேண்டும். இதற்குத் தடையாகவுள்ள பக்க அரசியலை ஒழுங்குபடுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# மீள்குடியமர்வுக்கான கொடுப்பனவு இழுபறியாவதால் மக்கள் விசனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் இழுபறிகள் நிலவுவதாகப் பல பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களை உடனடியாக வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கும்படி கூறிவிட்டு, அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க - அடுத்தவாரம், அடுத்தமாதம் எனக் கூறிச செல்வதால் - கொடுப்பனவுகளை எதிர்பார்த்திருக்கும் மக்கள் ஏமாற்றம் அடைந்து வருகின்றனர்.

அத்துடன், நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும், இதுவரை சொற்ப எண்ணிக்கையான குடும்பங்களுக்குரிய கொடுப்பனவுகளே வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு தாமதமாவதால் - இக்கொடுப்பனவுகள் தங்களுக்கு முழுமையாகக் கிடைக்காமற் போய்விடுமோ என்ற அங்கலாய்ப்பும் மக்களிடையே எழுந்துள்ளது. (சு)

# மகேந்திரபுர குடியிருப்புகளை கண்காணிப்புக்குழு பார்த்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாஷையூர் மகேந்திரபுர மக்கள் தம்மை மீளக்குடியமர்த்த வேண்டும் என்று கோரி, யாழ்ப்பாண யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவற்றுக்கு மகஜர் கொடுத்ததன் அடிப்படையில், சம்பவ இடங்களைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சென்று பார்வையிட்டது.

பாரியளவிலான யுத்தம் இப்பகுதியில் இடம்பெற்றதன் காரணமாக மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் இப்பகுதியில் தாரளமாகப் புதைக்கப்பட்டுள்ளன.

எனவே, இப்பகுதியிலிருந்த மிதிவெடிகள், வெடிபொருட்கள் யாவும் அகற்றப்பட்ட பின்னர், மீளவும் குடியமர அனுமதிக்கப்படுமென அப்பகுதி இராணுவ அதிகாரி - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் எவரும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

# யாழ். திட்டம் குறித்து கொழும்பில் கருத்தரங்கு

## வட - கிழக்கு அரச அதிபர்கள் பங்கேற்பு

ஐந்தாண்டுக்குரிய யாழ்ப்பாணத் திட்டம் குறித்த இரு நாள் கருத்தரங்கு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள கலதாரி ஹோட்டலில் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இக்கருத்தரங்கில் வட - கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த எட்டு அரசாங்க அதிபர்களும் மற்றும் பல திணைக்களக் கூட்டுறவுத் தலைவர்களும், திட்டப்பணிப்பாளர்களும், பிரதித்திட்டப் பணிப்பாளர்களும், சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றினா. இக்கருத்தரங்கு நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது. (லி)

# யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலைமை வேலைவாய்ப்புக்களுக்கு சாதகமானதல்ல!

**பொருளியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவரான கலாநிதி வி.வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரையாளராகக் கடமையாற்றி, 1980 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியற்துறையின் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1990 ஆம் ஆண்டு விவசாயபீடம், யாழ். பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டபோது விவசாயப் பொருளியற்துறைப் பேராசிரியராக நியமனம்பெற்றார். 1993 ஆம் தொடக்கம் நியூசிலாந்திலுள்ள மஸ்சி பல்கலைக் கழகத்தில் (massey university) பொருளியற்துறையில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். தற்போது அங்கிருந்து விடுமுறையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அதிதிப்புலமையாளராக ஒரு வருடம் கடமையாற்றுவதற்கென வருகை தந்துள்ளார். அவருடனான நேர்காணல் இது.**

*கேள்வி:* தற்போது உங்களது பணிகள் எவ்வாறு அமைந்துள்ளன?

*பதில்:* பொருளியல் சிறப்பு மாணவருக்கு வேறுபட்ட பாடநெறிகளில் விரிவுரைகள் எடுப்பதுடன், அவர்களது ஆய்வுக் கட்டுரைகள் தொடர்பான ஆலோசகராகவும் கடமையாற்றுகின்றேன். அத்துடன், பொருளியற்துறையின் இளம் விரிவுரையாளர்களின் பட்டப்பின் படிப்புத் தொடர்பான ஆய்வு அலுவல்களில் உரிய ஆலோசனையும், உதவியும் வழங்கி வருகின்றேன். இது தவிர, எமது தமிழ் பிரதேசங்களின் சமூக, பொருளாதார முன்னேற்றம் பற்றிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முடிந்தவரை வழங்குவதற்குத் தயாராகவுள்ளேன்.

*கேள்வி:* யாழ்ப்பாணத்தின் தற்போதைய பொருளாதாரநிலை பற்றித் தங்களின் கருத்தென்ன?

*பதில்:* யாழ்ப்பாணத்தின் தற்போதைய பொருளாதார நிலைமை, சில தனிப்பட்ட சிறிய உற்பத்தி அலுவல்கள் தவிர்ந்த ஏனையவை முற்றாக முடங்கியதொனறாகவும், சிதைக்கப்பட்டதொன்றாகவும் காணப்படுகின்றது. இது எமது மக்களுக்கு உரிய வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு எவ்வகையிலும் சாதகமானதொன்றல்ல. இன்று எமது மனித வளம் வெளிநோக்கிச் செல்வதைத் தடுத்துநிறுத்த வேண்டிய பாரிய பணி இருக்கின்றது. அதற்குரியவகையில், உற்பத்தி சார்ந்த அலுவல்களையும், சேவைகளையும் மேம்படுத்தி வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது மிக அவசியமானதாகும்.

*கேள்வி:* இதனை யாழ்ப்பாண சமூகம் சரியானபடி உணர்ந்துள்ளதா?

*பதில்:* உண்மையில் நிலை




மைகளை அவதானிக்கும்போது அவ்வாறு தெரியவில்லை. ஏனெனில், சமூகத்தில் பொதுவாக நிலவும் கருத்து யாதெனில்- இனத்துவப் பிரச்சினை அதிதீவிரமடைந்ததற்கு முன்னதாக இருந்த ஒரு நிலைமை திரும்ப வருமாயின் அதுவே போதுமானதென்ற ஓர் உணர்வே காணப்படுகின்றது. அதாவது, வேண்டிய பொருட்களையும், சேவைகளையும் தடையின்றி நுகரக்கூடிய நிலைமை. ஆனால், பொருளாதாரத்தை எமது மக்களைத் தாங்கிக் கொள்ளக் கூடியதொன்றாக மாற்றிக்கொள்வதுதான் இன்றைய சூழலில் மிக அவசியமானதெனலாம். அதற்குரிய வகையில் உற்பத்திச்சேவை நடவடிககைகள் மறுசீரமைக்கப்படுவது அவசியமாகும்.

*கேள்வி:* அவ்வாறு செய்வதற்குரிய சரியான அரசியல், பொருளாதாரச் சூழல் ஒன்று உருவாகிவிட்டதாக நீங்கள் கருதுகின்றீர்களா?

*பதில்:* அத்தகைய சூழல் ஒன்று இத்தருணத்தில் மிகத் தேவையானதாகும். அதனை உருவாக்குவதற்குரிய சில முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதை அங்கீகரிப்பது அவசியமாகும். ஆகவே, இம்முயற்சிகள் தகுந்த பலனளிக்கும் என்ற நம்பிக்கை அவசியமானதென்பதுடன், அவை பலனளிக்குமிடத்துக் காலம் தாழ்த்தாது பொருளாதாரத்தைச் சீர்படுத்துவற்கான முயற்சிகளை அமுலாக்குவதற்குத் தயாராக இருக்கவேண்டும். அதற்குரிய வகையில் எமது சமூக, பொருளாதாரச் சிந்தனைகளை நெறிப்படுத்த வேண்டிய திட்டங்களையும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

*கேள்வி:* இந்த விடயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியற்துறையின் பங்களிப்பு எவ்வாறு அமைந்துள்ளது?

*பதில்:* எமது பொருளியற்துறை இம்முயற்சிக்கு உறுதுணையாய் இருக்கும்வகையில் தனது அலுவல்களை அமைத்துக்கொள்வதற்கு முடிந்தவரை முயன்று வருகின்றது. உதாரணமாக - பொருளியற் சிறப்பு, இறுதி வருட மாணவர்கள் தமது ஆய்வினை முற்றாகவே எமது பிரதேச வளங்களின் பல தரப்பட்ட பயன்பாடுகளையும், பிரச்சினைகளையும் வெளிக்கொணரும் வகையில் அமைத்துக் கொண்டுள்ளனர். அதற்குச் சார்பாக இம் மாணவர்கள் சென்ற வாரம் எமது பிரதேச வளங்களை மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்குச் சென்று நேரடியாக அவதானித்து வந்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து மீண்டும் ஒரு தடவை கிளிநொச்சி சென்று, சற்று ஆழமானமுறையில் அங்குள்ள சமூக பொருளாதார நிலைமைகளை அவதானிக்கவும் பொருளியற்துறை திட்டமிட்டுள்ளது. இதுதவிர, இத்தகைய ஆய்வுகளுக்குரிய அடிப்படை அரசியற்பொருளியற் கல்வியை எமது துறை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

*கேள்வி:* இந்த விடயத்தில் தங்களின் நேரடியான பங்களிப்புப் பற்றிச் சற்றுக் கூறமுடியுமா?

*பதில்:* நான் அபிவிருத்திப் பொருளியல், அரசியற்பொருளியல், பொருளாதார வரலாறு என்பவற்றில் உரிய பயிற்சியும், மிகுந்த அக்கறையும் கொண்டிருப்பதனால்- அந்த அறிவையும், அனுபவத்தையும் வேண்டியவாறு வழங்க முடியுமெனக் கருதுகின்றேன். தற்போதையநிலையில் இத்துறைசார் அறிவு எமது பிரதேச முன்னேற்றத்துக்குப் பெரிதும் அவசியமானதாகும். இந்தவொரு கோணத்திலேயே எமது வளங்களின் பயன்பாடுகள் பற்றியும் சிந்திக்க வேண்டியதாகவுள்ளது.

*கேள்வி:* நீண்டகாலம் வெளிநாட்டில் பணிபுரிந்துள்ளீர்கள். எமது தமிழப்பிரதேச வளர்ச்சியில் அங்கு வாழ்கின்ற எமது தமிழ்மக்கள் உரிய உணர்வுடன் செயற்படுகின்றார்களா?



கலாநிதி. வி. வித்தியானந்தன்

*பதில்:* இந்த விடயத்தில் அவர்களது போக்கு ஒரு கலப்பு நிலையில் இருப்பதாகவே கொள்ளவேண்டும். வெளிநாடுகளில் வசிக்கும் பலர், தமது மக்களுக்கு நேரடி உதவிசெய்யும் நோக்கில் நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்க முன் வருகின்றனர். ஆனால், அதே நேரத்தில் உயர்மட்டங்களிலுள்ளோர் தமிழ்ப்பகுதிகளின் பொருளாதார வளங்களை உற்பத்திச் சார்புடையவையாக மாற்றும் பல்வேறு திட்டங்களுக்கு உதவியளிக்க வருகின்றனர் என்பதையும் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

**நேர்காணல்: -
எஸ். சாந்தகுமார்**

# ஆளுங்கட்சிப் பின்னணியில் நடந்த அட்டகாசம்; தொடராகக் கடத்தப்பட்ட பெண்களும் சிறார்களும்!

**நேரடி றிப்போர்ட்**

**கொழும்பிலிருந்து – உதரன்**

(நேற்றைய தொடர்ச்சி)

அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள சீருடைகளில் சில கொழும்பில் பிரபல பெண்கள் பாடசாலைகளின் சீருடைகள் எனப் பொதுமக்கள் கூறினர்.

அவற்றை நான் பார்க்கக்கூடியதாகவும் இருந்தது. பாடசாலைகளின் பெயர்களை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை.

மர்ம வீட்டிலிருந்து இன்னும் பல அதிர்ச்சியூட்டும் தடயங்களும் கிடைத்துள்ளன.

போலிப் பிறப்புச் சான்றிதழ்கள், பாடசாலைக் கணிப்பீட்டுத் தேர்ச்சி அறிக்கைகள், டயறிகள், ஆபாசப் புத்தகங்கள், பாலியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் பொருட்கள், மருத்துவர்கள் பயன்படுத்தும் கையுறைகள், சத்திர சிகிச்சை உப கரணங்கள், கருத்தடை மாத்திரைகள், வலி நீக்கும் மாத்திரைகள், பொலிஸ்நிலைய இறப்பர் முத்திரைகள் (சீல்), ஆபாசப்படங்கள் எடுப்பதற்கான புகைப்பட வில்லைகள் என்பனவும் கிடைத்துள்ளன.

வீட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டிகளிலிருந்து பல விலையுயர்ந்த மருந்து வகைகளும், சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தும் பல வகையான ஊசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வீட்டைத் தோண்டியபோது கடிதங்கள் சில எடுக்கப்பட்டன. அக் கடிதங்களில் சில அரசியல்வாதிகள் எழுதிய கடிதங்களாகும். ஆளும் கட்சியிலுள்ள அரசியல்வாதிகளின் கடிதங்களாக இருக்கலாம் எனப் பொதுமக்கள் கூறுகின்றனர். வீட்டைத் தோண்டியபோது புகைப்படங்கள் சிலவும் கிடைத்துள்ளன. அப்புகைப்படங்களில் ஒன்று கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாம்.

சிறுமி மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, பொதுமக்கள் ஆத்திரம் கொண்டமையால் மர்ம வீட்டை அடித்து நொருக்கியதோடு மட்டுமல்லாது, பல பொருட்களையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இதனால் முக்கிய தடயப்பொருட்கள் பல எரிந்து சாம்பலாகியுள்ளன. ஒரு குளிர்சாதனப்பெட்டி ஒன்று எரிந்த நிலையில் இருப்பதை என்னால் காணமுடிந்தது. இக்குளிர்சாதனப் பெட்டியிலே பல ஊசி மருந்துகளும், மயக்க மருந்துகளும், வேறு முக்கிய தடயப்பொருட்களும் இருந்ததாகப் பொலிஸார் ஒருவர் என்னிடம் கூறினார்.

விசாரணைக்குத் தேவையான பல பொருட்களைப் பொதுமக்கள் ஆத்திரத்தினால் எரித்துவிட்டனர். இதனால், விசாரணையை நகர்த்திச் செல்வதில் சற்றுத் தாமதம் ஏற்படலாம் என்றும் கூறினார்.

அதேவேளை, சிறுமி ஒருவர் வீட்டிற்குள் இருக்கின்றார் என்ற தகவலைச் சொன்ன பாண் பேக்கரியில் வேலை செய்பவரைக் கிராண்ட்பாஸ் பொலிஸார் நையப்புடைத்துள்ளனர். அவருடன் நான் கதைக்க முற்பட்டபோது, அவர் பயத்தின் காரணமாக ஏதும் கதைக்க மறுத்துவிட்டார். உண்மையை வெளிக்கொணர உதவியதால் தாக்கப்பட்டார் அவர். இன்று அவர் உண்மை பேசவே பயப்படுகிறார். தொடர்மாடியில் வசிக்கும் பொதுமக்களிடம் நீதியான விசாரணைகள் நடைபெறுமா என்று கேட்டபோது - இன்னும் சில திடுக்கிடும் தகவல்களைச் சொன்னார்கள்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளின் பின்னணியில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கும் தொடர்பு இருக்கிறதாம். இவர் அரசியற்கூட்டம் ஒன்றில் தற்கொலை குண்டுதாரிகளால் கொல்லப்பட்ட அரசியல் தலைவர் ஒருவரின் மகன் என்று கூறுகின்றார்கள். அவர் மேல் மாகாணத் தேர்தலில் போட்டியிட்டுக் கடைசி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவராம் என்ற தகவலையும் சொன்னார்கள்.

கொழும்பு நகர ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரி ஒருவரும் இந்த சட்ட விரோதச் செயலின் பின்னணியில் இருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து செய்திகள் கசியத் தொடங்கியுள்ளன. இப்பெண்மணியுடன் தொடர்புடையவர்கள்- முக்கிய அமைச்சர் ஒருவருடன் தொடர்புகொண்டு உறுகொடவத்தைச் சம்பவத்தைத் திசைதிருப்ப உதவுமாறும் கோரியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

உண்மையான விசாரணைகள் மேற்கொண்டால் தலைநகரில் உள்ள முக்கியஸ்தர்கள் பலருடைய அந்தரங்கங்கள் வெளிவர வாய்ப்புள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தத் தொடர்மாடி வீட்டில் யார் வசித்தார்கள் என்ற விபரங்களை நான் அறிய முற்பட்டபோது, உறுகொடவத்தைப் பகுதியைச் சேர்ந்த வயது முதிர்ந்த பெண்மணி சில தகவல்களை என்னிடம் கூறினார்.

இந்தவீட்டில் ஒரு பெண்மணியும் அவரது மகளுமே வசித்து வருகின்றனர். இவர்கள் அதிகாலையிலேயே வீட்டை விட்டு வெளியேறிவிடுவர். இரவு 12 மணியளவிலேயே வீட்டிற்கு வருவர். ஆடம்பரமான குளிரூட்டப்பட்ட வாகனங்களிலேயே வந்து இறங்கிச் செல்வர் என்று கூறினார்.

தொடர்மாடிப் பகுதியிலுள்ள ஒரு கடைக்காரரிடம் கேட்டபோது, அவர் வேறு சில தகவல்களைத் தந்தார். இரவு வேளைகளில் சிலர் இவ்வீட்டிற்கு வருவர். ஒரு சில வெளிநாட்டவர்களும் வந்துள்ளனர். சிலரிடம் கமராக்கள் இருந்ததையும் நான் கண்டுள்ளேன் என்று கூறினார்.

கொட்டாஞ்சேனையில் வசிக்கும் ஒருவர் தகவல் தெரிவிக்கையில் - இந்த வீட்டுக்காரப் பெண்மணியினுடைய மகள் ஒரு சிகையலங்கார நிலையத்தை கொட்டாஞ்சேனையில் வைத்திருக்கிறார். இந்த நிலையத்திற்குப் பல இடங்களிலிருந்தும் பெண்கள் வருவார்கள். தினமும் சிகையலங்காரநிலையம் கூட்டத்தால் நிரம்பிக் காட்சி தரும் என்று கூறினார்.

கொழும்பில் அரசியற்கட்சிக்கு வேலைசெய்யும் ஒருவர் சில தகவல்களைத் தந்தார். உறுகொடவத்தைத் தொடர்மாடிச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரான நிஷாந்த சிறிவர்த்தனலியனகே என்ற பெண்மணியை எனக்குத் தெரியும் என்றார். எப்படித் தெரியும் என்று கேட்டேன். கொட்டாஞ்சேனைப் பகுதியில் அரசியலில் ஈடுபட்டு, தேர்தலில் போட்டியிட்ட அரசியல்வாதிக்குத் தேர்தல் காலங்களில் வாக்குகள் சேகரிப்பதில் உதவியுள்ளார். மிக முக்கிய பெண்மணியாக அந்த அரசியல்வாதிக்கு இருந்துள்ளார். தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ளார் என்று அவர் கூறினார்.

சிங்கள மாற்றுப் பத்திரிகையைச் சேர்ந்த நண்பர் ஒருவர் சில தகவல்களை என்னிடம் தந்தார். அந்தப் பெண்மணிக்குப் பல இடங்களில் வீடுகள் இருப்பதாகவும், அரசியல்வாதிகளுடனும், பாதாள உலகக் குழுக்களுடனும் தொடர்பு இருப்பதாகவும், இன்னும் பல இடங்களில் இது போன்ற இடங்களில் சட்டவிரோதச் செயல்கள் நடைபெறுவதாகவும் கூறினார். அத்தோடு, பொலிஸாருக்கும் இப் பெண்மணிக்கும் நல்ல தொடர்புகள் இருப்பதாகவும் கூறிய அவர், உறுகொடவத்தைத் தொடர்மாடி வீட்டில் பிள்ளைகள் காணாமல் போனதாகப் பொலிஸில் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டமை இதற்கு மிகச் சிறந்த சான்றாகும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தக் குழுவினரால் சிறுவர், சிறுமிகள் எங்கிருந்து கடத்திக் கொண்டு வரப்படுகின்றார்கள் எனப் பொதுமக்களிடம் கேட்டேன்.

*(நாளை தொடரும் ... )*

# ஈராக் போர்க்களம்



பைனாக்குலருடன் அமெரிக்கப் படை கண்காணிப்பு.



பிரித்தானியத் துருப்புக்களின் ஊடுருவல்.



அந்நியப் படையினை நோட்டமிடும் ஈராக்கிய இளம் பெண்.



ஈராக்கிய குடியரசுப்படையணியின் வீரன்.



புஷ்ஷின் கொடும்பாவி பங்களாதேஷில் எரிப்பு.

## விநியோகப் பாதையினை பாதுகாப்பதற்கு அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் தீவிர முயற்சி

(பக்தாத்)

பக்தாத் நோக்கிய தமது நகர்வுக்கு முன்பாக, விநியோகப் பாதையைப் பாதுகாப்பதில் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. எதிர்பார்த்ததைவிட போர் நீடிப்பதால், கூட்டணிப் படைகளிடையே உளவியல் தாக்கம் ஏற்படலாமென ஜோன் போட்டர் என்னும் பிரிட்டிஷ் உளவியலாளர் எச்சரித்துள்ளார். எந்தப் படையாலும் தொடர்ந்து 40 நாட்களுக்கு மேலாக போரிட முடியாது என அவர் குறிப்பிட்டார்.

நகரப் போர்முறையில் பிரிட்டிஷ் படைகளுக்கு வடக்கு அயர்லாந்து அனுபவம் கைகொடுத்தாலும் ஈராக்கின் பாலைவனக் களம், அயர்லாந்தை விட வேறுபட்டது என அவர் சுட்டிக்காட்டினார்.



இதுவரையில் 26 பிரிட்டிஷ் படையினரும் 51 அமெரிக்கப் படையினரும் பலியாகியுள்ளனர். 14 அமெரிக்கப் படையினர் காணாமற் போயுள்ளனர். உயிரிழப்பு அதிகரிக்க நேர்ந்தால் அது படையினரிடையே மன உளைச்சலை ஏற்படுத்தும் என அவர் எச்சரித்தார்.

## விநியோகப் பணிக்காக ஈராக்கியருக்கு பயிற்சி

### ஹங்கேரியின் திட்டம் கைவிடப்பட்டது

(பக்தாத்)



ஈராக்கில் இருந்து தப்பியோடிய அந்நாட்டு இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கி, அவர்களை அமெரிக்கப் படைகளுக்கு உதவச் செய்யும் ஹங்கேரி இராணுவத்தின் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சுதந்திர ஈராக்கியப் படை என அழைக்கப்படும் இவர்கள், போர் நடவடிக்கைகளில் அல்லாது விநியோகப் பணிகளிலேயே ஈடுபடுவர். இதுவரை 80 ஈராக்கியர் பயிற்சிபெற்ற நிலையில் இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இவர்களில் 50 பேர் ஏற்கனவே உம் கசார் துறைமுக நகரில் விநியோகப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆனால், இத்திட்டத்தில் ஈராக்கிய இளைஞர்கள் மேலும் இணைய முன்வராமையாலேயே இப்பயிற்சித்திட்டம் கைவிடப்பட்டதாக வெளியான செய்திகளை அமெரிக்க அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

## பலத்தைச் சோதிக்கும் தாக்குதலாம்!

பக்தாத் அருகே உள்ள குடியரசு காவல் படையின் பலத்தை பரிசோதிக்கும் முகமாகவே பக்தாத் அருகே கூட்டணிப் படைகள் மட்டுப்படுத்திய தாக்குதல்களை நடத்துவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேசமயம், இத்தகைய தாக்குதல்களில் கூட்டுப் படைகள் கடும் இழப்பைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'எதிரியின் இரத்தம் ஆறாகப் பெருகுகிறது' என ஈராக் இராணுவப் பேச்சாளர் ஒருவர் ஈராக்கிய தொலைக்காட்சியில் கூறினார்.

உலகவலம்

## நஜாப் சோதனை நிலைய படுகொலை நியாயமானது என்கிறது அமெரிக்கா!

அமெரிக்கப் படைகளால் சோதனை நிலையம் ஒன்றில் ஏழு ஈராக்கிய பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை என அமெரிக்கப் படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எமது படைகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முழுச்சுதந்திரம் இருக்கிறது என அவ்வதிகாரிகள் தெரிவித்தனர்.

நஜாப் நகரில் சிறிய வான் ஒன்றில் நேற்றுமுன்தினம் 13 ஈராக்கியப் பெண்களும், சிறுவர்களும் பயணஞ் செய்த போது சோதனை நிலையம் ஒன்றில் அவர்களை அமெரிக்கப் படைகள் தடுத்துள்ளன. எனினும், வானை ஓட்டிச் சென்ற பெண், வாகனத்தை நிறுத்தாது தொடர்ந்து சென்றபோது, அமெரிக்கப் படைகள் சரமாரியான துப்பாக்கிச்சூடு நடத்தியதில் வானுக்குள் இருந்த ஏழு பெண்கள் பலியாகினர். இரண்டு பெண்கள் படுகாயமுற்றனர். இச்சம்பவம் குறித்து நாம் விசாரணை நடாத்துகின்றோம். எனினும், படையினர் செய்தது சரியே என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.



அமெரிக்கரின் சோதனைச்சாவடி ஒன்று.

இச்சம்பவம் ஈராக்கிய மக்களிடையே பெரும் கொந்தளிப்புநிலையைத் தோற்றுவித்துள்ளது. அமெரிக்கர்களின் கொள்கை, முதலில் கொல், அதன் பின்பே கேள்வி என்பதா என ஈராக்கியர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அமெரிக்கப்படை மீதான ஈராக்கின் தாக்குதலுக்கு பழிவாங்கும் செயலாக இது அமைந்திருக்கலாம் என அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## ஈராக் போர்க்கைதிகள் கியூபா செல்வார்களா?



போர்க்கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள ஈராக்கியப் படையினரை, கியூபாவில் அந்நாட்டின் கட்டுப்பாட்டிலில்லாத தனித்தீவொன்றில் இருக்கும் அமெரிக்கத் தளத்துக்குக் கூட்டிச் செல்லும் எண்ணம் ஏதுமில்லை என பென்ரகன் அறிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான் போரில் கைதான அல் - கெய்டா சந்தேகநபர்கள், அமெரிக்காவின் கியூபத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவில் உடையில் இருந்தபோது சந்தேகத்தின் பேரில் கைதான சுமார் 300 ஈராக்கியப் படையினர், தற்போது அமெரிக்கப் படைகள் வசம் உள்ளனர். இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை, ஈராக்கியப் போர்க் கைதிகளைக் கையாள்வது குறித்து அமெரிக்க - பிரிட்டிஷ் படையதிகாரிகளிடையே சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

இக்கைதிகளை சர்வதேச சட்டங்களுக்கமைய, சர்வதேச குற்றவாளிகளுக்கான நீதிமன்றை உருவாக்கி பகிரங்கமாக விசாரிக்க வேண்டும் என்ற பிரிட்டிஷ் அதிகாரிகளின் கூற்றை அமெரிக்க அதிகாரிகள் ஏற்கவில்லை. போர்க் கைதிகளைத் தனியாக நீண்டநாட்களுக்கு தடுத்துவைத்திருப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக்கை மீட்கும் வரை ஓயமாட்டோம் என்கிறார் புஷ்

(பென்ரகன்)

ஈராக்கிய மக்களை விடுவிக்கும் வரை போர் முடிவடையமாட்டாது என அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார். நாம் பெரும் படையுடன் வருகிறோம். ஈராக்கிய மக்களின் எதிரியான ஈராக்கிய அரசை அகற்றுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பென்சில்வேனியாவில் அமெரிக்கக் கரையோர காவற்படையினர் மத்தியில் அவர் தொடர்ந்து பேசிய போது, ஈராக் விடுவிக்கப்படும்வரை நாம் எமது நடவடிக்கையை நிறுத்தப் போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

அதேசமயம் - தமது போர் நடவடிக்கைக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்தைப் பெறும் அமெரிக்க - பிரிட்டன் முயற்சிகளை பிரான்ஸும், ஜேர்மனியும் முழுமூச்சுடன் எதிர்த்து வருகின்றன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முகாம் அமைக்க அனுமதிக்காதீர்
# மாநகர ஆணையரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் இராணுவத்தினர் முகாம் அமைப்பதற்கு அனுமதியளிக்க வேண்டாமென, பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுக்காலை மாநகரசபை ஆணையாளரைச் சந்தித்த குருநகர் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள்- அப்பகுதியில் இராணுவத்தினர் முகாம் அமைப்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுவதுடன், கடற்தொழில் செய்வதற்கு கட்டுப்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஏற்படும் எனத் தெரிவித்தனர். அத்துடன், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மாநகரசபை ஆணையாளரைச் சந்தித்து மேற்படி விடயம் சம்பந்தமாகக் கலந்துரையாடினர்.

இதேவேளை - இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும், மாநகரசபை ஆணையாளரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதேசமயம் - யாழ். மாநகர சபையினரால், இராணுவ முகாம் அமைப்பதற்கான காணி இதுவரை உத்தியோகபூர்வமாக கையளிக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாநகரசபைக் கட்டடம், மாநகர சபை மண்டபம், வாடிவீடு என்பன அமைந்திருந்த பாரிய நிலப்பரப்புக்களில் முகாம் அமைக்கும் முயற்சிகளில் இராணுவத்தினர் நேற்றும் தொடர்ந்து ஈடுபட்டிருந்தனர். (லி,13)

# யுத்த காலத்திலேதான் பாதுகாப்பு வலயம் தேவை!
## கலந்துரையாடலில் மன்னார் ஆயர்

யுத்த காலத்தில்தான் உயர் பாதுகாப்பு வலயம் அவசியம். சமாதானச் சூழலில் அது அவசியமற்றதொன்று.

- இவ்வாறு மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னாரில் கடந்தவாரம் நடைபெற்ற, மன்னார் மாவட்டத்தின் மீள் குடியேற்றம் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை, பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் கரலியத்த, வன்னிப் பிரதேச இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் மல்லவாராச்சி, மன்னார் மாவட்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் பெர்ணான்டோ, தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணோதயம் மூர்த்தி, இலக்கியன் மற்றும் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக யுத்த அனர்த்தங்கள் காரணமாக இடப்பெயர்வு, வீடுகள் சேதம், பொருள் பண்டங்கள் அழிவு, உயிர்ச்சேதம் ஆகியவற்றைச் சந்தித்த மக்களுக்கு, ஒருவருட காலத்துக்கு முன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு நிம்மதியைக் கொடுத்தது. இதன்காரணமாக மக்களில் ஒரு பகுதியினர் சொந்த இடங்களில் வாழ்ந்தாலும் ஏனைய பலர் அகதி முகாம்களிலேயே இன்னமும் வாழ்கிறார்கள். அத்துடன், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், பொதுமக்களின் காணிகள் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதால், இப்பகுதி மக்களும் அகதிகளாகவே அங்குமிங்கும் வாழ்கின்றனர். எனவே இப்பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு எட்டப்படவேண்டுமென்று சந்திப்பில் பங்கேற்ற மக்கள் பிரதிநிதிகள் ஏகோபித்த குரலெழுப்பினர்.

பிற்பகல் நடந்த நிகழ்வில் குழு ஆராய்வும், குழுக்களின் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

இப்படியான கலந்துரையாடல்களினால் இராணுவத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும், பொதுமக்களுக்குமிடையில் புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புண்டு என்ற கருத்து அனைவராலும் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# புலிகளின் அரசியற்....

சுயநிர்ணய உரிமை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

நண்பகல் அளவில், நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், புலிகளின் அரசியல் விவகார உபகுழுவினரை நோர்வே நாடாளுமன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு நோர்வே, கன்சர்வேடிவ் மற்றும் சோசலிஷக் கட்சிகளின் எம்.பிக்களை புலிகள் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

நேற்று இக்குழுவினரை, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ஹொவ்டே, ரினாலோ் என்ற நோர்வே இராணுவத் தளத்துக்கு அழைத்துச் சென்றார். (க)

## ஆமர் வீதியில் நேற்று களேபரம்

நேற்றிரவு 8.45 மணியளவில் கொழும்பு ஆமர் வீதியில் நடைபெற்ற விபத்தில் 17 வயது யுவதி ஒருவர் பலியானார்.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள், யுவதியை மோதிய பஸ்வண்டியை எரித்ததுடன் அவ்வீதியால் சென்ற கார்களையும் உடைத்தனர். (01)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தினர் நடாத்தும் முத்தமிழ் விழா இன்றும் நாளையும் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

## லங்கா முடித...

ஆனால் - விடுதலைப் புலிகள் இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை புலிகள் நிராகரித்துவிட்டதாகக் குறிப்பிட்ட கண்காணிப்புக் குழுப் பேச்சாளர்- போர்நிறுத்த உடன்படிக்கைக்கு எதிரான வேறு ஆயுதக்குழு இத்தாக்குதலை நடத்தியிருக்கும் சாத்தியக்கூறு இருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த மாதம் முல்லைத்தீவுக் கடலில் இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்று, சீன மீன்பிடி ட்ரோலர் மீது தாக்குதல் நடத்தியதும் இதில் 17 பேர் பலியானதும் தெரிந்ததே.

## தாக்கியோரை...

இது தொடர்பாக நல்ல முடிவு வரும் என எதிர்பார்க்கிறோம்.

ஆனால், இத் தாக்குதலை நடத்தியது அரசாங்கமோ,புலிகளோ இரண்டு தரப்புமே சம்பந்தப்படாத ஒரு குழுவாக இருந்தால், அது பற்றி அரசும் புலிகளும் இணைந்து கண்டுபிடிப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றார்.

## மாரப்பனவுடன்...

அனுபவிக்க நேரிடும் எனவும், இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் தெரிவித்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இவ்விடயத்தில் பிரதமரை நேரடியாகத் தலையிட்டு இராணுவமுகாம் அமைப்பதை உடனடியாக நிறுத்தும்படியும் கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது, ஒரு கட்டத்தில் பிரதமர் ரணில், யாழ்.நகரின் மத்தியில் அமைக்கப்படும் இராணுவமுகாம் ஒரு தற்காலிக ஏற்பாடே எனக் குறிப்பிட்டார். எனினும் - இதனை ஏற்றுக்கொள்ளாத கூட்டமைப்பினர், இராணுவத்தினர் இப்பகுதியில் சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்களை இறக்கி வருவதாகச் சுட்டிக்காட்டினர்.

இவர்களது கோரிக்கையைச் செவிமடுத்த பிரதமர், இது ஓர் தற்காலிக நடவடிக்கை என மீண்டும் தெரிவித்ததுடன், பாதுகாப்பு அமைச்சருடன் இவ்விடயம் தொடர்பாகப் பேசி இறுதி முடிவு எடுப்பதாகவும் தெரிவித்தார். (லி,9)

# பொலிஸ் மா அதிபர் இன்று யாழ்.வருகிறார்

பொலிஸ் மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா இன்று யாழ்ப்பாணம் வருகிறார். இவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்து, குடாநாட்டின் சகல பொலிஸ் அதிகாரிகளுடனும் சந்திப்பை நடாத்தவுள்ளார்.

ஆனந்தராஜா, யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் வருகை தரவுள்ளார். பின்னர் - அவர் நெடுந்தீவுக்கும் சென்று நிலைமைகளை நேரில் அவதானிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ரா,சு)

# உயர்தர ஆசிரியர் பற்றாக்குறை; விபரங்களை அமைச்சு சேகரிப்பு!

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில், கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

விரைவில் வழங்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தின் போது, இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

முதற்கட்டமாக கலை, வர்த்தகம் ஆகியவற்றுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். இதற்காக - கலை, வர்த்தகப் பிரிவுகளில் பாடரீதியாக நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களைக் கல்வி அமைச்சு கோரியுள்ளதாக, மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

வட- கிழக்கு மாகாணத்தில் 24 வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் உயர்தர கலை, வர்த்தகப் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை, எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு, சகல கல்விப் பணிப்பாளர்களையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஜரிஸ்...

திணைக்களத்தின் பிரதித் தலைவர் ஜேம்ஸ் டியூரிஸ், இம்பாக்ட் அமைப்பைச் சேர்ந்த ரைரோவ் பேர்டினன்ட் ஆகியோரும் கூடவருகின்றனர்.

சனியன்று கொழும்பிலிருந்து புறப்படமுன் ஜோன் ஹியூம், ஜனாதிபதியையும் சந்தித்துப்பேசவுள்ளார்.

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து நாளை மறுதினம் காலை 11 மணிக்கு யாழ். பஸ்நிலையத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தவுள்ளதாக புதிய ஜனநாயகக் கட்சி அறிவித்துள்ளது.

## உள்ளூராட்சி...

நேற்றிரவு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இம்முடிவு வெளியானது.

இதேவேளை - தேர்தல் முடிவுகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டது தொடர்பாகவும் நேற்று ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

# மரண அறிவித்தல்



## மார்க்கண்டு துரைராசா

**(முன்னாள் எழுதுவினைஞர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)**

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு துரைராசா 01.04.2003 (செவ்வாய்க்கிழமை) நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் - காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவயோகேஸ்வரியின் (தேவி) அன்புக்கணவரும், பகீரதன் (ஜேர்மனி), மயூரதன் (ஜேர்மனி), கிரிதரன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), கோணேஸ்வரன் (ஆசிரியர் யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), ஆரணி (விளம்பர முகாமையாளர், நமது ஈழநாடு), ஆகியோரின் பாசமிகு தந்தையும், துசிலா (ஜேர்மனி), அனுசா (ஜேர்மனி), மகிழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருத்திகா, ஹரிஷன், மாதங்கி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மகேஸ்வரி, செல்வரத்தினம், வீரசிங்கம் மற்றும் சேனாதிராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம், அரசரட்ணம், மகேஸ்வரி, சுந்தரலிங்கம் மற்றும் துரைராசா, மகாதேவன், யோகசௌந்தரி, புஸ்பராணி, சிவமலர், இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரமேஸ்வரன், காலஞ்சென்ற இராசகோபால் மற்றும் கௌரி, சரஸ்வதி, ஜெகசோதி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் இளங்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

126, ஞானவைரவர் கோவில் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

இணைந்த கணிதம்
A/L. 2004
★ தொகையீடு
★ தள விசைகள்
ஆரம்பம் :- 03-04-2003
நேரம் :- 6.30 pm
இடம் :- கோவில் வீதி,
நல்லூர் (கந்தன் கருணை)
by. M. ராஜன் (சி-737)

# துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தின்
விளம்பர முகாமையாளர்
செல்வி ஆரணி துரைராசா
அவர்களின்
அன்புத் தந்தையார்

## மார்க்கண்டு துரைராசா

அவர்களது மறைவினால் கலங்கி நிற்கும்
அவர்தம் குடும்பத்தினரின் துயரில் நாமும்
பங்குகொள்கின்றோம்.

நிர்வாகி மற்றும் பணியாளர்கள்,
நமது ஈழநாடு.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.50 | 96.97 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.60 | 159.99 |
| 1 யூரோ | 104.02 | 105.20 |
| 1 சுவிஸ் பிராங் | 70.66 | 71.80 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.41 | 57.41 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.82 | 25.82 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.